மலர்-2 இதழ்-33 ஜனவரி 1-15 2018 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்



## நெருப்பை நெருப்பு எரிக்குமா?

## பக்தனை எரிக்காத நெருப்பு

# வழிபாட்டிற்கெல்லாம் தலைசிறந்த வழிபாடான

# சப்த மாதா வழிபாடு

கன்னியர் வழிபாடு என்பது மிகப் பழமையான வழிபாடுகளில் ஒன்றாகும், இந்து மதத்தில் ஒருசில வழிபாடுகள் கடுமையாக இருந்தாலும், உடனடி பலன் தரும் வழிபாடுகளாக விளங்கும். அந்த வகையில் சப்த கன்னியர் வழிபாடு மிகுந்த பலனைத் தரும் வழிபாடுகளில் மிக முக்கியமானதாக உள்ளது.

பாரத தேசத்தில் பெண்களை தெய்வமாக வழிபடுவது என்பது பழங்காலம்தொட்டே இருந்துவரும் வழக்கம். அதிலும் சக்தி வழி பாடு என்பது தாய்வழி சமூகக் காலத்தில் இருந்தே நம்மிடம் இருந்துவருகிறது. அன்னை பராசக்தியின் கன்னி வடிவமான சப்த கன்னியர் வழிபாடு என்பது வழிபாட்டிற்கெல்லாம் முக்கிய வழிபாடாகும்.

அநேக இடங்களில் 7 செங்கல்லை வைத்து அலங்கரித்து, பொங்கலிட்டு படையல் வைப் பதையும் பார்த்து இருப்பீர்கள். அவை யாவுமே `சப்த மாதாக்கள்' எனப்படும் சப்த கன்னியர் வழிபாடுதான்.

பிராம்மி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி எனப் பெயர் கொண்ட சப்த மாதாக்கள் நம்முடைய எல்லா வேண்டுதல்களையும் விருப்பங்களையும் இன்றும் நிறைவேற்றி வருகிறார்கள்.

சண்ட முண்டர் என்ற அரக்கர்கள், பெண்ணின் கருவில் தோன்றாத கன்னித்தன்மை வாய்ந்த ஒரு பெண்ணால் மட்டுமே தனக்கு மரணம் உண்டாக வேண்டும் என்ற வரத்தை பிரம்மாவிடம் வேண்டி வாங்கினார்கள். ஒரு பெண்ணா நம்மை கொல்லப்போகிறாள் என்ற தைரியத்தில் அவர்கள் எல்லோரையும் கொடுமை செய்தார்கள். அன்னை ஆதிசக்தியின் அருளைப் பெற்ற காத்தியாயன முனிவரையே கொடுமை செய்யத் துணிந்த நிலையில், பராசக்தி கொதித்தெழுந்து அசுரர் படையை அழிக்கக் கிளம்பினாள். அப்போது அசுரக் கூட்டத்தை ஒழிக்க தன்னிலிருந்து ஏழு கன்னியர்களை உருவாக்கினாள். சிவன், விஷ்ணு, பிரம்மா, முருகன், வராக மூர்த்தி, யமன் என ஒவ்வொருவரின் அம்சமாக உருவாகிய ஏழு கன்னியர்கள் அசுரக்கூட்டத்தை அழித்து, அன்னை பராசக்தியின் ஆசியைப் பெற்றனர்.

இந்த கன்னிமார்களின் சக்தி மக்களுக்கு தீங்கு செய்யும் கொடிய சக்திகளை அழிக்க உறுதுணையாக விளங்க வேண்டும் என்ற நோக்கத்தில், அவர்களை பூவுலகில் இருந்து மானிடர்களை காக்குமாறு சிவபெருமானால் பணிக்கப்பட்டனர்.

இதனால் சிவபெருமானின் அம்சமான வீரபத்திரரின் துணையோடு சப்தகன்னியர் அருள்புரியத் தொடங்கினர். சிவாலயத்தில் பெரும்பாலும் இவர்கள் ஏழு பேரின் சிலைகளைக் காணலாம். ஆலயங்கள் மட்டுமல்ல, ஆற்றங் கரையோரம், ஏரி, குளம், ஊரின் எல்லைகள் என எங்கேயும் இவர்களின் சிலைகள் வழிபடும் விதமாக இருந்து வருகின்றன. ரிக் வேதம், மார்க்கண்டேய புராணம், காளிதாசரின் குமார சம்பவம், விஷ்ணு தர்மோத்தர புராணம், தேவி பாகவதம் போன்றவற்றில் கன்னிமார்களின் விவரங்கள் கூறப்பட்டுள்ளன.

சப்த கன்னியர் அருள் இருந்தால் மனித வாழ்க்கை எளிதாக கடையேறும் என்ப தால், அக்காலங்களில் சப்த கன்னியரை காணு மிடமெல்லாம் பிரதிஷ்டை செய்து வழிபட்டனர் முன்னோர்.

பிராம்மி பிரம்மனின் அம்சமாகத் தோன்றிய இந்த கன்னி, சரஸ்வதியின் அம்சமானவள். கல்வி, கலைகளில் தேர்ச்சிபெற வேண்டுவோர் இவளை வணங்கி அருள் பெறலாம். மூளையின் செயல்களைக் கட்டுப்படுத்தும் பிராம்மி, மேற்கு திசைக்கு அதிபதியாக இருந்து ஆட்சிபுரிகிறாள். தோலுக்கு தலைவி என்பதால் தோல் வியாதிகளைத் தீர்ப்பவள்.

மகேஸ்வரி ஈசனின் அம்சமான இந்த கன்னி கோபத்தை நீக்கி, சாந்த குணத்தை அருளக்கூடியவள். சகல பிரச்னைகளையும் தீர்த்து வைக்கும் இந்த தேவி வடகிழக்கு திசைக்கு உரியவள். சிவனைப்போலவே தோற்றமும் ஆயுதங்களும் கொண்டவள். மகேஸ்வரி பித்தத்தினை கட்டுப்படுத்தும் வல்லமைகொண்டவள்.

கௌமாரி முருகப்பெருமானின் அம்சமாகத் தோன்றிய கன்னி இவள். சஷ்டி, தேவசேனா என பெயர்கொண்ட இவள், குழந்தை வரம் அருளும் நாயகி. செவ்வாய் தோஷம் உள்ளவர்களும்,





வீடு, மனை தொடர்பான சிக்கல் உள்ளவர்களும் இந்த கன்னியை வணங்கலாம். ரத்தத்துக்கு தலைவி என்பதால் உஷ்ண சம்பந்தமான எந்த வியாதிக்கும் கௌமாரியை வேண்டலாம்.

வைஷ்ணவி திருமாலின் அம்சமாகத்தோன்றிய கன்னி இவள். `நாராயணி' என்றும் அழைக்கப் படுகிறாள். செல்வ வளம் பெறவும், உற்சாகமாகப் பணியாற்றவும் இவளை வேண்டலாம். விஷக்கடி, கட்டிகள், வீக்கம் போன்ற வியாதிகளைத் தீர்ப்பவள் இந்த தேவி. திருமாலைப் போன்றே சங்கு சக்கரம் ஏந்தி பக்தர்களைக் காப்பவள்.

வராகி வராக மூர்த்தியின் அம்சமாக அவ ரைப்போலவே தோன்றியவள் இந்த கன்னி. சிவன், விஷ்ணு, சக்தி ஆகியோரின் அம்சமாக இருப்பதால் பெரும் வலிமைகொண்ட இந்த தேவி எதிரிகளை வெல்லவும், தடைகளை அகற்றவும் உதவிசெய்பவள். வராகியை வணங் குபவர்களுக்கு துன்பமே வாராது என்பது மக்க ளின் நம்பிக்கை.

இந்திராணி இந்திரனின் அம்சமாக அழகே வடிவாகத் தோன்றிய கன்னி இவள். மிகப் பொருத்தமான துணையைத் தேடித்தரும் இந்திராணி மகாலட்சுமியின் அம்சம் என்றும் போற்றப்படுகிறாள். கடன் பிரச்னைகள் தீரவும், தாம்பத்திய சிக்கல் நீங்கவும் இந்த கன்னியே துணைபுரிகிறாள்.

சாமுண்டி ருத்திரனின் அம்சமாக, பத்திர காளி யின் வடிவமாக முதலில் தோன்றிய கன்னி இவள். எந்தவித மாந்திரீக சக்திக்கும் கட்டுப்படாத இந்த கன்னி, நம்பியவரை காக்கும் பலம்கொண்டவள். எந்தவிதமான பயம் இருந்தாலும், இவளை வேண்டியதும் அது விலகிவிடும். வீரத்துக்குப் பொறுப்பான சாமுண்டி, உடல் பலத்துக்கும் நலத் துக்கும் பொறுப்பானவள்.

இந்த சப்த கன்னியர்கள் ஒவ்வெருவரும் ஒவ்வொரு சக்தியை பெற்று விளங்குவதால் இவர்களை ஒருசேர வணங்கினால் மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தும் கிடைக்கும் என்பதால் இவர்களை கிராம தேவதை யாக வழிபட்டுவந்தனர் நமது முன்னோர். ஆதிபராசக்தியின் அம்சத்தில் இருந்து தோன்றி, அரக்கர்களை வதம்செய்து, மக்களைக் காக்கும் இந்த சப்த கன்னியர், தமிழகமெங்கும் எல்லா இடங்களிலும் இருந்து காத்துவருகிறார்கள்.





# விபூதியின் அற்புதக் கதை

பர்னநாதன் என்பவன் உணவையும் தண்ணீரையும் மறந்தவனாக சிவனை நினைத்து கடும் தவம் புரிந்தான். ஒருநாள் அவனுக்கு கடுமையான பசி எடுத்தது. தவம் கலைந்தது. கண்ணைத் திறந்தான்.

அப்போது அவனை சுற்றி சிங்கங்களும் புலிகளும் பறவைகளும் என பல வன உயிரினங்கள் யாவும் காவலுக்கு இருந்தது.

பசியால் முகம் வாடி இருந்தவனைக் கண்ட பறவை கள் பழங்களைப பறித்து பர்னநாதன் முன் வைத்தது.

இது ஈனின் கருனையே என்று மகிழ்ந்து பசி தீர கனிகளை சாப்பிட்டு முடித்து மீண்டும் தவத்தை தொடர்ந்தான்.

இப்படியே பல வருடங்கள் கடந்தோடியது.

தவத்தை முடித்து கொண்டு சிவ வழிபாட்டை தொடங்கினான்.

ஒருநாள் தர்ப்பைபல புல்லை அறுக்கும் போது அவன் கையில் கத்திபட்டு இரத்தம் கொட்டியது.

ஆனால் அவனுக்கோ எந்த பதற்றமும் இல்லை. குழந்தைக்கு ஆபத்து என்றால் தாய் பதறுவதை போல பதறியது ஈசன் தான்.

சிவபெருமான் வேடன் உருவில் தோன்றி, பர்னநாதன் கையை பிடித்து பார்த்தார். என்ன ஆச்சரியம்ஞ். ?!

இரத்தம் சொட்டிய இடத்தில் விபூதி கொட்ட ஆரம் பித்தது. வந்தது சிவபெருமான் என்பதை அறிந்தான் பர்னநாதன்.

இரத்தத்தை நிறுத்தி சாம்பலை கொட்டச் செய்த தாங்கள் நான் வணங்கும் சர்வேஸ்வரன் என்பதை நான் அறிவேன்.

“இந்த அடியேனுக்கு தங்கள் சுயஉருவத்தை காணும் பாக்கியம் இல்லையா?” என்று வேண்டினான் பர்னநாதன்.

ஈசன் தன் சுயரூபத்தில் காட்சிக் கொடுத்தார்.

“உனக்காகவே இந்த சாம்பலை உருவாக்கினேன். அதனால் இந்த சாம்பல் இன்று முதல் விபூதி என்று அழைக்கப்படட்டும். உன் நல்தவத்தால் விபூதி உருவா னது. அக்னியை எதுவும் நெருங்க முடியாததை போல இந்த விபூதியை பூசி அணிந்து கொள்பவர்களின் அருகில் துஷ்ட சக்திகள் எதுவும் நெருங்காது. விபூதி என் ரூபம். அதற்கு நீயும் துணையாக இருந்த வா” என்று ஆசி வழங்கினார் சிவபெருமான்.

விபூதியை கட்டை விரலாலும் மோதிர விரலாலும் சேர்த்து எடுத்து மோதிர விரலால் நெற்றியில் இட்டுக் கொள்ள வேண்டும்.

ஆனால் கட்டை விரலும் நடுவிரலும் சேர்ந்து விபூதியை எடுக்கக்கூடாது. கட்டைவிரலாலும் நெற்றியில் விபூதியை வைக்க கூடாது என்கிறது சிவபுராணம்.

“விபூதியால் என்ன நன்மை?” என்று ஸ்ரீ இராமர், அகத்திய முனிவரிடம் கேட்டார்.

“பகை, தீராத வியாதி, மனநல பாதிப்பு, செய்வினை பாதிப்பு இப்படி எது இருந்தாலும் தொடர்ந்து விபூதியை அணிந்து வந்தால் அந்த பிரச்சனைகள் விலகும்” என்று அகத்திய முனிவர் ஸ்ரீ இராமருக்கு உபதேசம் செய்தார்.

ஸ்ரீ மகா லஷ்மிக்கு உகந்ததும் விபூதி. அதனை விரும்பி விபூதி கலந்த நீரில் தினமும் அவள் நீராடுகிறாள். திரு என்றால் மகாலஷ்மி.

அதனால்தான் விபூதியை திருநீறு என அழைக்கிறோம்.



# சாஸ்திர விதிப்படி உடலில் திருநீறு அணியக்கூடிய 18 இடங்கள்

உடலில் திருநீறு பூசுபவர்களுக்கு எந்தவித கெடுதல்களு விளையாது என்று சிவ புராணம் கூறுகிறது. அவ்வளவு சக்தி வாய்ந்த திருநீற்றின் சிறப்பை பல்வேறு மகான்கள் சிறப்புறக் கூறியுள்ளனர். அந்த வகையில் திருநீற்றை உடலின் 18 இடங்களில் பயன்படுத்த வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது.

1. தலை நடுவில் (உச்சி)
2. நெற்றி
3. மார்பு
4. தொப்புளுக்கு(கொப்பூழ்) சற்று மேல்.
5. இடது தோள்
6. வலது தோள்
7. இடது கையின் நடுவில்
8. வலது கையின் நடுவில்
9. இடது மணிக்கட்டு
10. வலது மணிக்கட்டு
11. இடது இடுப்பு
12. வலது இடுப்பு
13. இடது கால் நடுவில்
14. வலது கால் நடுவில்
15. முதுகுக்குக் கீழ்
16. கழுத்து
17. வலது காதில் ஒரு பொட்டு
18. இடது காதில் ஒரு பொட்டு

பலன்கள்:

திருநீறு அணிவதால் தடையற்ற இறைச் சிந்தனை, உயர்ந்த நற் குணங்கள்,

குறைவற்ற செல்வம், நல்வாக்கு, நல்லோர் நட்பு, போன்ற எல்லா நல மும் பெற்று சிறப்புடன் வாழலாம்.

உடல் நலனும் இரத்த ஓட்டமும் சீர்படும். பாவங்கள் என வரையறுக் கப் பட்டவைகளை ஒதுக்கும் மனப் பாங்கும், தொல்லைகள் அனைத் தையும் அழித்தும் அனைத்துப் பேறுகளையும் அளித்துப் பிறவிப் பிணி அறுத்து மோட்சம் செல்ல வழிகாட்டும். இதைத்தான் திருமூலர் பின்வரும் பாடலில் தெரிவிக்கிறார்.

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே..







வளர்ந்து வரும் டிஜிட்டல் யுகத்தில்
இந்து சமயக் கருத்துக்களையும்,
பழமையான ஆன்மீக புத்தகங்களையும்

**ஆன்மிகமலர் டிரஸ்ட்**
Tamilnadu Government Redg.304/2016

முழு முயற்சியுடன் டிஜிட்டல் மயமாக்கி வருகிறது.
அழகிய வண்ணங்களுடன்,
கண்ணைக்கவரும் விதத்தில்
புத்தம் புதிய பொலிவுடன்,
அனைத்துவித டிஜிட்டல் கருவிகளின் மூலமும்
சிறுவர் முதல் வயதானவர் வரை அனைவரும்
தெளிவாக படிக்கும்விதத்தில் தயாரித்து வருகிறோம்.
எங்களின் சேவைக்கு உங்கள் உதவி அவசியம்
உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
மேலும் தொடர்பு கொள்ளவும்
7299992699 / 8825844033

# வேதாத்திரி மகரிஷி கூறிய அற்புத தத்துவம்

வேதாத்திரி மகரிஷி, தனது தத்துவங்கள் மூலமாக, ஆன்மிக தேடலுக்கும், அமைதியான, நிம்மதியான வாழ்க்கைக்கும் வழிகாட்டுகிறார். இவரது ஆன்மிக தத்துவங்கள் அறிவியலையும் உள்ளடக்கி இருப்பது தனிச்சிறப்பு.

கடல் அலை எழுவதை பார்க்கிறோம். அலை என்பது நீரின் அசைவு. அலை என்னும் இயக்கத்தை நிறுத்திவிட்டால், மீதம் இருப்பது நீர் மட்டுமே. நீர் என்பதே மூலம். அலை என்பது தோற்றம். கடல் என்ற மூலத்தின் சிறப்பு நிலையே அலை.

இதைப்போலவே இந்த பிரபஞ்சத்தின் இயக்கங்களை நிறுத்திவிட்டால், எஞ்சி இருப்பது இறைநிலை மட்டுமே என எளிய உதாரணத்தோடு விளக்குகிறார். அண்டவெளியே இறைவன் என்கிறார்.

மனித உறவுகள் மேம்பட மகரிஷி கூறிய தத்துவங்கள் மிகவும் சிறப்பு மிக்கவை.

1. பேச்சிலும் நடத்தையிலும், பண்பில்லாத வார்த்தைகளையும் தேவையற்ற மிடுக்கையும் காட்டுவதை தவிர்த்து, அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.
2. பிரச்னைகள் ஏற்படும் போது மற்றவர்கள் முதலில் இறங்கி வர வேண்டும் என காத்திருக்காமல் நீங்களே பேச்சை துவக்க முன் வாருங்கள். யாரையும் ஒப்பிடாதீர்கள்.
3. எல்லோரிடமும் எல்லா விஷயங்களையும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
4. புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்பு சொற்களை கூறவும் கூட நேரம் இல்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
5. கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்.
6. அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.
7. அற்ப விஷயங்களை பெரிதுபடுத்தாதீர்கள்.
8. மற்றவர்களைவிட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள். தயக்கத்துடனும் பயத்துடனும் பேசாமலும் இருக்காதீர்கள்.
9. மற்றவர் கருத்துகளை, செயல்களை, நிகழ்ச்சிகளையும் தவறாக புரிந்து கொள்ளாதீர்கள்.
10. உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கு கேட்டதை அங்கு சொல்வதையும் அங்கு கேட்டதை இங்கு சொல்வதையும் விடுங்கள். உங்களை நோக்கி அது ஒருநாள் திரும்பும்.
11. நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதிடாதீர்கள். நீங்கள் முடியவே முடியாது என்று நினைத்ததை உலகில் ஒருவன் செய்து கொண்டிருப்பான்.
12. உங்கள் கருத்துகளில் உடும்பு பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள். பிடிவாதத்தை கைவிடுங்கள்.
13. அளவுக்கு அதிகமாய், தேவைக்கு அதிகமாய் ஆசைப்படாதீர்கள். திருப்தி என்பது எல்லாவற்றிலும் மிக முக்கியம்.
14. அர்த்தம் இல்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டே இருப்பதை விடுங்கள்.
15. எந்த விஷயத்தையும் பிரச்னையையும் நாசூக்காக கையாளுங்கள்.
16. சில நேரங்களில் சில சங்கடங்களை சகித்துதான் ஆக வேண்டும் என்பதை மனதார உணருங்கள்.
17. 'நானே பெரியவன் நானே சிறந்தவன்' என்ற அகந்தையை விடுங்கள். வல்லவனுக்கு வல்லவன் இருக்கிறான்.
18. மற்றவர்களுக்கு மரியாதை காட்டவும், இனிய இதமான சொற்களை பயன்படுத்தவும் தவறாதீர்கள் என்கிறார் மகரிஷி.



# அஷ்டமி, நவமி நல்லகாரியத்திற்கு உகந்த நாட்களா?

நம் முன்னோர்கள் அஷ்டமி அன்றும், நவமி அன்றும் நல்ல காரியங்கள் ஏன் செய்வதில்லை? அதற்க்கு என்ன காரணம்?

பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்வதை ஒரு நாள் என்று சொல்கிறோம்.

அதே பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனை சுற்றி வருவதை ஒரு வருடம் என்கிறோம்.

நிலவு தன்னைத்தானே சுற்றிக்கொண்டு பூமியை சுற்றி வருவதை ஒரு மாதம் என்கிறோம். அதனால் தான் மாதத்திற்கு திங்கள் என்ற பெயர் உண்டு. (திங்கள் என்றால் சந்திரன்)

நிலவு தன்னைத்தானே சுற்றிக்கொண்டு பூமியை சுற்றிவரும்போது ஒரு பாதி சுற்று (15 நாட்கள் அமாவாசையாகவும்) அடுத்த 15 நாட்கள் பௌர்ணமி என்றும் சொல்கிறோம்.

அமாவாசைக்கும், பௌர்ணமிக்கு இடைப்பட்ட எட்டாவது நாளை அஷ்டமி என்று சொல்கிறோம். ஒரு மாதத்திற்கு இரண்டு அஷ்டமி வரும்.தேய்பிறை அஷ்டமி என்றும் வளர்பிறை அஷ்டமி என்றும் சொல்கிறோம்.

சரியாக அஷ்டமி தினத்தன்று நாம் வாழும் பூமியானது சூரியனுக்கும், சந்திரனுக்கும் நடுவில் வருகிறது.

அவ்வேளையில் சூரியனின் சக்தியும் , சந்திரனின் சக்தியும் பூமியை தங்கள் பக்கம் இழுப்பதால் ஒருவித Vibration ஏற்படுகிறது.

அந்த Vibration பூமியில் உள்ள அனைத்து ஜீவ ராசிகளிடமும் எதிரொலிக்கும். பேருந்தில் நாம் பயணம் செய்யும்போது நம்மால் சரியாக எழுத முடிவதில்லை அல்லவா? அதைப் போன்று.

அதன்காரணமாக எந்த ஜீவராசியாலும் ஒரு நிலையான முடிவை எடுக்க முடியாது. அவ்வேளைகளில் நாம் எடுக்கும் முடிவும் நிலையற்றதாக இருக்கும்.

நவமி கழிந்தபிறகே பூமி தனது இயல்பு நிலைக்கு திரும்பும். அப்போதுதான் மனிதர்கள் உட்பட அனைத்து ஜீவராசிகள் மனமும் நிலை பெரும்.

அதனால் அஷ்டமி அன்றும், நவமி நவநாழிகை வரை எந்த முடிவையும் எடுக்கக்கூடாது என்று நம் முன்னோர்கள் முடிவெடுத்தார்கள்.

# குருதேவர் ஸ்ரீஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தரின் பிறந்தநாள்

**25 பாகம்**

## மனித வாழ்வு மேம்படுவதற்காக பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

எண்ணற்ற பெரிய மகான்கள் மற்றும் சிறந்த யோகிகளை ஈன்றெடுத்த பாரதம் என்றென்றும் ஆன்மீகத்தில் முன்னணியிலுள்ளது. பல மகோன்னத குருமார்கள் மற்றும் சிறந்த யோகிகள் நிறைந்து விளங்குகிறது நம் பாரதநாடு. அவர்களில் ஒருவர்தான் குரு தேவர் ஸ்ரீஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர். இவர் மூலமாக இக்காலகட்டத்தில் இறைவனை அடைவதற்கான 'கிரியாதிறவுகோல்ஜ' நமக்கு அளித்திருக்கிறது. மனிதனுள் இருக்கும் தெய்வீக ஆற்றலை தேடுவதற்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த உன்னத மகான்களுக்கு நாம் எவ்வளவு நன்றிக்கடன்பட்டிருக்கவேண்டும்! பரமஹம்ஸ யோகானந்தர் மூலமாக இன்று எதை அளித்திருக்கின்றதோ அதன் மதிப்பு ஈடு இணையற்றது. மனிதனின் ஆன்மாவை மேம்படுத்திக் கொள்வதற்கான ஓர் ஆன்மீக யுக்திதான் 'கிரியா யோகம்'. நம் பாரதத்திலிருந்து ஒரு மகாகுரு பழமையான விஞ்ஞானத்தை இன்றைய நாளில் நமக்காக அருளி வழங்கியிருக்கிறார். இறைவனால் இவ்வுலக மக்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஒரு மகா புருஷனான குருதேவர் ஸ்ரீஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் ஜகத்குரு ஆவார்.



ஒரு யோகியின் சுயசரிதம் மற்றும் பல மேன்மையான நூல்களை எழுதி அருளியுள்ள ஸ்ரீஸ்ரீ பரம்ஹம்ஸ யோகானந்தர் 1893–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் தேதி வடகிழக்கு இந்தியாவில் இமயமலைக்கு அருகிலுள்ள கோரக்பூரில் பிறந்தார். தாயார் ஞானப்ரபா கோஷ். தந்தை பகவதி சரண் கோஷ். வங்காளியரான இவர்கள் க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்தவர்களாவர். தாயார் கனிவுள்ளம் கொண்டவராகவும் தந்தை ஆழ்ந்த சிந்தனையுடையவராகவும் கண்டிப்புடையவராகவும் இருந்தார். இவர் இருவரும் மகாவதார பாபாஜியின் சீடரான லாஹிரி மகாசயருக்கு சிஷ்யர்களாவர்.

2018 ஜனவரி 5ஆம் நாள் குருதேவர்ஸ்ரீஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தரின் 125ஆவது பிறந்தநாள். இந்த நாள் ஆன்மீக வளங்கள் பெருக்கெடுத்து அவ்வின்பம் இவ்வுலகிற்கு ஊடுருவிப்பாய்ந்து கொண்டிருக்கும் நாள். கருணை பொங்கிய குருதேவரிடமிருந்து தெய்வீக அன்பு பொங்கி வழியும் நேரம். அவரால் உருவாக்கப்பட்ட இயக்கமாகிய யோகதா சத்சங்க சொஸைடி ஆஃப் இந்தியாவின் நூறாவது ஆண்டாகவும்(மார்ச் 1917 மார்ச் 2017) உள்ளது. இந்த நூறாவது ஆண்டு விழாவும் குருதேவரின் 125ஆவது பிறந்தநாள் விழாவும் ஒன்றாக இணைந்து வருகிறது. கொல்கட்டா, ராஞ்சி, நொய்டா (டில்லி) மற்றும் துவாரஹாட் என நான்கு ஆசிரமங்கள் யோகதாவிற்கு உள்ளன. மேலும் 200க்கும் மேற்பட்ட கேந்த்ரா மற்றும் மண்டலிகள் இந்தியாவில் உள்ளன. ஆண்டு தோறும் குருதேவரின் பிறந்தநாள் விழாவினை கொண்டாடப்பட்டு வருகின்றது.

தற்போது சென்னை கேந்த்ராவின் மேற்பார்வையில், கோடம்பாக்கத்திலுள்ள ஸ்ரீராகவேந்திரா திருமண மண்டபத்தில் 4.1.2018 முதல் 7.1.2018 வரை நான்கு நாட்கள் குரு தேவரின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட உள்ளது. இந்நாளில் ஸ்ரீஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தரின் சீடர்களும் மேலும் அவருக்கு சீடர்களாக விரும்புபவர்களும் மேலே கூறிய இடத்திற்கு வந்து அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி விழாவில் கலந்துகொண்டு இன்புறலாம்.

புனிதமான யோகதா சத்சங்கப் பாதையில் புதிதாகச் சேர விரும்புபவர்கள்அதற்குரிய விண்ணப்பப்படிவத்தை விழா நடக்குமிடத்திலிருந்து பெற்று பூர்த்தி செய்து அதற்கான கட்டணத்தைச் செலுத்தி பயிற்சியைத் தொடங்கலாம். குருதேவருடைய அளவிடற்கரிய அருளாசிகளையும் நிபந்தனையற்ற அன்பையும் பலமடங்கு பெறுவதற்கு மேலே கூறிய நாட்கள் மிகவும் மகத்தானதாக உள்ளது. இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி இன்புற அனைவரும் வாரீர்!!!

வாழ்க்கையின் புதிர்களை அறிந்துகொள்ள எப்பொழுதும் நாடுகின்ற அனைவருக்கும், நிஜத்தைப்பற்றி உறுதியற்ற நம்பிக்கையை தங்கள் இதயங்களில் வைத்துள்ளோருக்கும், தங்கள் தேடலில் ஏற்கனவே பரம்பொருளை நோக்கி திரும்பிவிட்ட சாதகர்களுக்கும் மகாவதார பாபாஜியின் வம்ச பரம்பரையில் வந்துள்ள குருதேவர் ஸ்ரீஸ்ரீ பரமஹம்ஸ யோகானாந்தரின் சொற்பொழிவுகளின் உரைநடைத்தொகுப்பு, நடைமுறை வழிகாட்டுதலையும் ஒளியூட்டும் உட்பார்வைகளையும் தருகிறது.

1917ம் ஆண்டில் பரமஹம்ஸர் நிறுவியுள்ள ஸ்தாபனம் யோகதா சத்சங்க சொஸைடி ஆஃப் இந்தியா, என்னும் பெயரில் ஜார்க்கண்ட் மாநிலத்திலுள்ள ராஞ்சியில் உள்ளது. இந்த தியான ஆலயம் நிறுவி இன்றைக்கு நூறாண்டுகள் நிறைவு பெறுகின்றது. இறைவனின் அன்புக்கட்டளைக்கிணங்க ஸ்ரீஸ்ரீ மகாவதார பாபாஜியின் வழிகாட்டுதலில் ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வர் கிரியால் 1920 ஆம் ஆண்டில் அமெரிக்காவிற்கு சர்வதேச மிதவாதிகளின் மகாசபைக்கு இந்தியப் பிரதிநிதியாக இவர் அனுப்பிவைக்கப்பட்டார்.

இவர் செல்ஃப்ரியலைசேஷன் ஃபெல்லோஷிப் ஸ்தாபனத்தின் சர்வதேச தலைமையகத்தை அமெரிக்காவிலுள்ள லாஸ் ஏஞ்ஜலீஸில் 1925ம் ஆண்டில் நிறுவினார்.

அமெரிக்காவில் பரமஹம்ஸர், தன் சொற்பொழிவுகளில் இறைவனைத் தேடிக் கண்டுபிடிப்பது மட்டுமின்றி, மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி என்றும் அதற்கான வழிமுறைகளையும் கூறியதல்லாமல் அவற்றை மக்களுக்காகவே விட்டுச்சென்றுள்ளார்.

### இறைவனை மகிழ்விப்பதில் உள்ள ஆனந்தம்

குருதேவர் கூறுகிறார்: "இவைதான் எனது மகிழ்ச்சிமிகுந்த நாட்கள். நான் இரு காரணங்களுக்காக மகிழ்ச்சியாக இருக்கிறேன். என்னால் இறைவனை மகிழ்விக்க முடிந்தது. மேலும் கிரியா யோகச் செய்தியை பரப்புவதற்கென யோகதா சத்சங்கத்தின் இந்தப் பணியை உருவாக்குவதற்காக நான் என் குருதேவர் ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வரருக்கு அளித்த வாக்குறுதியை என்னால் நிறைவேற்ற முடிந்தது. தீய சக்திகள் என்னுடன் எப்பொழுதும் போராடியிருக்கின்றன. ஆனால் இறைவன் அவை அனைத்தையும் அழித்துவிட்டான். இந்த போதனைகள் மென்மேலும் முன்னேறிக் கொண்டிருக்கிறது."

அவர் தொடர்கிறார்: ஒவ்வொரு நாளும் நான் கூறுகிறேன், "இறைவா எனது கனவுகள் அனைத்தும் முடிந்துவிட்டன. இப்பொழுது நான் அறிந்துள்ள ஒரே ஒரு விஷயம் 'உனக்கான எனது அன்புதான்'. இறை ஆனந்தம் இத்தகையதாகும். வாழ்வதற்காக வேறு எதுவுமே இல்லை.

இங்கு நூற்றுக்கணக்கானோர் பணத்திற்கும் அதிகாரத்திற்கும் பித்துப்பிடித்திருப்பது போல் இந்தியாவில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் இறைவனுக்காக பித்துப்பிடித்திருக்கின்றனர். மரணத்திற்கு அழைத்துச் செல்லும் லோகா யத ரீதியான எட்டமுடியாத இலக்குடன் விளையாடுவதைவிட இறைவனுடன் கண்ணாமூச்சி ஆடுவது மிகவும் மேலானது. 'மரணம்' என்பது மாயை நீங்கிய நிலை. அச்சமயம்தான் நீங்கள் தோல்வியை ஒப்புக்கொண்டு கைவிடும் நிலையாகும்.

நீங்கள் உங்களுடைய தெய்வீக உள்ளார்ந்த ஆற்றலைப் பற்றிய இந்த அறியாமையிலிருந்து வெளியே வரவேண்டும். இறைவன் கூறுகிறான், "இப்பொழுதே வா, அறியாமையெனும் கல்லறையிலிருந்து உன்னையே மீண்டும் உயிர்ப்பித்துக்கொள்." இறுதியாக உங்களுடைய பலவீனங்களெனும் பாளங்களின் கீழே கிடத்தடப் படப்போவதற்கு நீங்கள் மறுப்பு தெரிவித்தால், நீங்கள் விடுதலை அடைவீர்கள்."

அவர் தொடர்கிறார்: "இந்தச் செய்தியை கேட்டுள்ள அனைவரும் இறைவனைக் காண் பதற்காக இப்பொழுதே முயற்சியை எடுங் கள். ஒவ்வொரு நாளும் தியானம் செய்து, பல வீனங்களெனும் அனைத்து களைகளையும் வேரோடு அகற்றிவிடுங்கள். அதனால் உங்களது வாழ்க்கைத் தோட்டம் அழகாக இருக்கும். உலகம் உங்களை ஓர் அடிமையாக்க விரும்புகிறது. நீங்கள் இறைவனுடன் தனியாக இருப்பதற்கு உலகத்திடமிருந்து நேரத்தைப் பறிக்கவேண்டும். மூடிய கண்களுடன் நீங்கள் ஓய்வெடுத்துக்கொண்டிருப்பதாக வைத்துக்கொள்வோம். எவரோ ஒருவர் வந்து உங்களுக்கு முன்பாக பூக்களை வைக்கிறார். ஆனால் கண்களைத் திறக்கமுடியாத அளவு உங்களுக்கு உறக்கமாய் உள்ளது. நீங்கள் கண்களைத் திறக்கும்பொழுது அந்த மலர்கள் மறைந்துவிட்டிருக்கின்றன. இறைவனை அரைமனதுடன் தேடும் மக்களுடைய நிலையும் இதேதான். அவன் அவர்களிடமும் வருகிறான். ஆனால் அவர்களது கண்கள் இந்த உலகக் கனவுகளில் மூடி இருக்கிறது. அவர்கள் கண்களை மீண்டும் திறக்கும்பொழுது அவன் மறைந்துவிடுகிறான். தியானத்திலும் உங்களுடைய அனைத்து செயல்களிலும் இரவும் பகலும் மனப்பூர்வமாக அவனைத் தேடுங்கள். உங்களது ஆசைகள் எனும் கனவுகள் மறைந்துவிடும்பொழுது நீங்கள் அவனை எல்லாயிடங்களிலும் காண்பீர்கள்."

## இறை உணர்வு நிலையில் வாழுங்கள்

பரமஹம்ஸர் அருளுகிறார்: "யோகம் என்பது எல்லாவற்றையும் இறை உணர்வுடன் செய்யும் கலை. நீங்கள் தியானித்துக் கொண்டிருக்கின்றபோது மட்டுமில் லாமல் வேலை செய்துகொண்டிருக்கும்போதும் உங்களுடைய எண்ணங்கள் அவனிடத்தில் இடையறாமல் வேரூன்றியிருக்கவேண்டும்.

இறைவனை மகிழ்விப்பதற்காகவே நீங் கள் அதைச் செய்துகொண்டிருக்கிறீர்கள்என்ற உணர்வுடன் வேலை செய்தால் அந்தச் செயல் உங்களை இறைவனுடன் இணைக்கின்றது. எனவே நீங்கள் தியானத்தில் மட்டுமே இறைவனைக் காணமுடியும் என்று எண்ணாதீர்கள். பகவத் கீதை போதிப்பதுபோல் தியானம், சரியான செயல் ஆகிய இரண்டும் தேவை. நீங்கள் இந்த உலகில் உங்களுடைய கடமைகளை ஆற்றும்போது இறைவனை நினைக்கிறீர்கள் என்றால் நீங்கள் மனத்தளவில் அவனுடன் இணைக்கப்படுவீர்கள்."

## இறைவனின் கேள்வியும் மனிதனின் பதிலும்

மேலும் அவர் கூறுகிறார்: இறைவனைத் தேடவேண்டும். இறைவனை அவனுடைய அநேக தன்மைகளில் ஒன்றான, அதுவும் மனதைத் தொடுகின்ற தன்மையில் ஒரு பிச்சாண்டி என்றும் கூறலாம். அவன் நம் கவனத்திற்காக ஏங்குகிறான். எவருடைய ஒரு பார்வையில் எல்லா நட்சத்திரங்களும், சூரியன்களும் சந்திரன்களும் மற்ற கிரகங்களும் நடுங்குகின்றனவோ அந்தப் பிரபஞ்சநாயகன் மனிதனின் பின்னால் ஓடிக்கூறுகின்றான்: "உன்னுடைய பாசத்தை எனக்குக் கொடுக்கமாட்டாயா? உனக்காக நான் படைத்திருக்கும் பொருட்களைவிட அதிகமாக என்னை கொடையாளியாகிய என்னை நேசிக்கமாட்டாயா? என்னை நீ தேடமாட்டாயா?"

ஆனால் மனிதன் கூறுகிறான்: "நான் இப்பொழுது வேலை மும்முரத்தில் இருக்கிறேன். எனக்கு செய்வதற்கு வேலை இருக்கிறது. உன்னைத் தேடுவதற்காக நான் நேரம் ஒதுக்க முடியாது." பின் இறைவன் கூறுகிறான்: "நான் காத்திருப்பேன்." இவ்வாறான இறைவனைத் தேடிக்கொண்டு அவனுக்காக வாழும் ஒருவனுடன் எப்பொழுதும் இறைவன் இருப்பான் என்பது உறுதி.

இறைவனை நேசித்துக்கொண்டு இறை உணர்வு நிலையில் வாழும் ஒரு மனிதன் தன் வாழ்வில் பிறருக்காக என்ன செய்வான் என்பது பற்றிய ஒரு செய்தியைக்கூற நான் விழைகின்றேன்.

செய்தி: ஒரு கப்பல் காற்றிலகப்பட்டு தகர்ந்தது. அதிலிருந்தவர்களில் இருவர் மட்டும் நீந்தி பாலைவனத்திற்குச்சமமான ஒரு தீவை அடைந்தனர். சிறிதளவு தண்ணீர் மட்டும் உள்ள அந்தத் தீவிலிருந்து தம்மைக் காப்பாற்றுவதற்கு இறைவனால் மட்டும்தான் முடியும் என்பதை உணர்ந்த இருவரும் பிரார்த்தனை செய்யத் தீர்மானித்தனர். ஆனால் யாருடைய பிரார்த்தனையைத்தான் இறைவன் கேட்பான்! என்பதை அறிவதற்காக தீவை தெற்குப்பக்கமென்றும் வடக்குப்பக்கமென்றும் இரண்டாகப் பிரித்தனர். ஒருவர் தெற்குப்பக்கத்திலிருந்தும் மற்றொருவர் வடக்குப் பக்கத்திலிருந்தும் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தனர். முதலில் அவர்கள் உணவிற்காக பிரார்த்தித்தனர்.



மறுநாள் காலையில் தெற்குப்பக்கத்தில் நல்ல பழங்கள் உள்ள ஒரு மரம் காணப்பட்டது. அதன் மறுநாள் அவர்கள் ஆடைகளுக்காகப் பிரார்த்தித்தனர். தெற்குப் பக்கத்திலிருந்த நபருக்கு மட்டும் ஆடை கிடைத்தது. அதன் மறுநாள் அங்கிருந்து தப்பித்துச் செல்வதற்கு தோணிக்காக இருவரும் பிரார்த்தித்தனர். தெற்குப்பக்கத்தில் தோணி வந்தது. தெற்குப் பக்கத்திலிருந்தவர் தோணியில் ஏறி தன்னைக் காப்பாற்றிக்கொள்ளத் தீர்மானித்தார்.

அவருக்கு வடக்குப் பக்கத் திலுள்ள நபரை தோணியில் ஏற்றுவதற்கு விருப்பமில் லை. காரணம் 'அந்த நபர் இறைவனால் சபிக்கப்பட்டவனாவான். அந்த நபரின் எந்தப் பிரார்த்தனையும் இறைவன் கேட்கவில்லை. அந்த நபரை தோணியில் ஏற்றினால் தெய்வகோபம் உண்டாகும்' என்று தெற்குப்பக்கத்திலிருந்த நபர் நினைத்தான். தோணி கரையிலிருந்து நகரத்தொடங்கியபோது ஆகாயத்திலிருந்து ஒரு குரல் கேட்டது. "நீ ஏன் வடக்குப்பக்கத்திலிருந்தவனை தோணியில் ஏற்றவில்லை?" "சபிக்கப்பட்ட அவன் இந்தத் தோணியில் ஏறினால் இறைவன் விரும்பமாட்டான். அதனால் இந்தத் தோணி ஒருவேளை தண்ணீரில் மூழ்கிப்போக வாய்ப்பு உள்ளது. அவனுடைய ஒரு பிரார்த்தனைகூட இறைவன் கேட்கவில்லையே" என்று தெற்குப் பக்கத்திலிருந்தவன் பதிலளித்தான். அதற்கு, "நீ தவறு செய்துவிட்டாய். 'உன்னுடைய பிரார்த்தனையை கேட்கவேண்டும்' என்பது மட்டும்தான் வடக்குப்பக்கத்திலிருந்தவனுடைய பிரார்த்தனையாக இருந்தது. அவனுடைய பிரார்த்தனையை மட்டும்தான் நான் கேட்டேன்" என்று ஆகாயத்திலிருந்து வந்த குரல் பதிலளித்தது. இதிலிருந்து என்ன தெரியவருகிறது என்றால் மேலே தரப்பட்டுள்ள செய்தியில் கூறியுள்ளவாறு பிறருடைய பிரார்த்தனை யினால்தான் பல நேரங்களிலும் நமக்கு பல நன்மைகளும் ஏற்படுகின்றன. குறிப்பாக பெற்றோரின் பிரார்த்தனைகள், நண்பர்களின் பிரார்த்தனைகள்.

இதுபோன்றபிரார்த்தனைகளுக்கு விடை கிடைப்பதற்கு சாத்தியதைகள் அதிகமாகும். வாழ்க்கையில் நம்மால் முடிந்தஉதவியை பிறருக்குச் செய்யவேண்டும்.சிலநேரம் சிலருடைய ஆசீர்வாத மும் பிரார்த்தனையும் ஆபத்துக்களிலிருந்தும் விபத்துக்களிலிருந்தும் காப்பாற்றும்.

மேலே கூறப்பட்டுள்ள பொருள் குறித்த எனது கருத்தினை கூற விழைகின்றேன்.

நேர்மையாகவும் உண்மையாகவும் வாழும் மனிதர்கள் எத்தனையோ இடையூறுகளை சந்தித் துத்தான் ஆகவேண்டும். இறுதியில் அவர்கள் வெற்றியைத்தான் அடைகின்றனர். நிலையில்லாத இவ்வுலக வாழ்வு வெறும் கனவு மட்டுமே. இதை நன்கு புரிந்துகொண்டால் நிலையான உலகம் ஏது என்பதையும் நிஜமான, அமைதியான மற்றும் பாதுகாப்பான வாழ்வு ஏது என்பதையும் எளிதில் புரிந்துகொள்ளமுடியும்.

அது தியானத்துடன் உள்ள வாழ்க்கை இறை வனை நம்முடன் இணைக்கச்செய்கின்றது. இறைவன் நம்முடன் இணையும்பொழுது நமக்கு பாதுகாப்பு கவசத்தை அவன் அளித்தருளுகிறான். எப்பொழுதும் உள்ள தும் எப்பொழுதும் நம்முடன் உறைந்துள்ளதும் இறைவன் மட்டுமே! இந்த உணர்வு நிலையில், அதாவது இறை உணர்வு நிலையில் வாழும் ஒரு மனிதன் எப்படிப்பட்ட உலகமானாலும் இவ்வுலகில் எங்கே வேண்டுமானாலும் வாழலாம்; வாழ முடியும். ஏனென்றால் அவன் அனைத்திற்கும் மேலான பரம்பொருளான இறைவனுடன் வாழுகிறான். அதனால் எப்பொழுதும் அவன் காப்பாற்றப்பட்டவனாகின்றான்; ஆசீர்வதிக்கப்பட்டவனாகின்றான்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909

# இரண்டாவது நவபாஷான முருகன்



கொடைக்கானலிருந்து 18 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது பூம்பாறை கிராமம். இந்த முருகன் நினைத்தால் தான் நாம் இங்கு வர முடியும்" இந்த தேதியில், இந்த நேரத்தில் வரவேண்டும் என்பது அவன் விருப்பம் . மிகவும் சக்திவாய்ந்த நவபாசான முருகன்.

இந்தியாவில் உள்ள எல்லா கோவில்களிலும் ஐம்பொன் வெங்கலம் கற்களால் ஆன சிலை கள்தான் உள்ளன. ஆனால் இந்தியாவில் உள்ள இரண்டு கோவில்களில் மட்டுமே நவ பாஷானத்தால் உருவாக்கப்பட்ட அபூர்வமான சிலைகள் உள்ளன.

1. பழனி மலை மீதுள்ள தண்டாயுதபாணி முருகன் சிலை,

2. பூம்பாறை மலையில் உள்ள குழந்தை வேலப்பர் முருகன் சிலை.

உலகிலேய நவபாஷான சிலையை உருவாக்கி பிரதிஷ்டை செய்தவர் போகர் ஆவார். பழனி முருகன் சிலையை மட்டுமின்றி இந்தப் பூம்பாறை முருகன் சிலையையும் செய்தவர் போகர்.

பழனி மலைக்கும், பூம்பாறை மலைக்கும் நடுவில் உள்ள யானை முட்டி குகையில் தான் நவபாஷான முருகன் சிலையை உருவாக்கினார். அந்த சிலையைத் தான் பழனி மலை மீது பிரதிஷ்டை செய்தார். தண்டம் கொண்டு அச்சிலையை உருவாக்கியதால் அதற்கு தண்டாயுதபாணி என்று பெயர் சூட்டினார்.

அக்கோவிலை இறைவனிடம் வேண்டி சிவ பூதங்களால் கோவில் மற்றும் மண்டபகங்களை கட்ட செய்தார் என்பது வரலாறு.

பின்னர் மறுபடியும் சீனநாட்டிற்கு சென்று பஞ்சபூத சக்திகளை மீண்டும் பெற்று யானை முட்டி குகைக்கு வந்து ஞான நிலையை அடையும் பிரம்மத்தை உணர்ந்து கொள்ளவும் ஆதிபராசக்தியின் துணைகொண்டு குருமூப்பு என்ற அருமருந்தை நிலைநிறுத்தவும் பஞ்ச பூதங்களை நிலைப்படுத்தி அதன் மூலம் குருமூப்பு சிலையை உருவாக்கினார். அந்த சிலைதான் பூம்பாறை மலையுச்சியிலுள்ள குழந்தை வேலப்பர் சிலையாகும்.

ஒரு சமயம், அருணகிரிநாதர் பூம்பாறை மலையில் வீற்றிருந்த குழந்தையப்பரை தரிசிக்க வந்தார். அப்போது இரவு நேரமானதால் கோவில் மண்டபத்தில் தங்கி தூங்கிவிட்டார். அப்போது ராட்சசி ஒருவள் அருணகிரிநாதரை கொல்ல வந்தபோது முருகன் குழந்தை வடிவம் கொண்டு காவியுடை அணிந்திருந்த அருணகிரி நாதர் மீது ஏறி விளையாடிக்கொண்டிருந்ததைக்கண்டு குழந்தையும் தாயும்தான் தூங்கிக் கொண்டிருக் கிறார்கள் என்று எண்ணி அருணகிரிநாதரைக் கொல்லாமல் சென்று விட்டதாம். இதனை தனது ஞான திருஷ்டியால் நடந்த சம்பவத்தை கண்டு குழந்தை வேடம் வந்து தன் உயிரை காப்பாற்றியதால் குழந்தை வேலர் என்று அழைக்கப்பட்டு குழந்தை வேலப்பராக இன்றும் அருள் பாலித்து வருகிறார். அவரின் பக்கத்திலேலே அருணகிரிநாதருக்கும் சிலையுடன் கோவில் உள்ளது.








## வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

**உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும் நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.**

**உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை**

(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)

**எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம். தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்**


தொடர்பு கொள்ளவும்:
ஆசிரியர்: நாகராஜன்
16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்
பொன்மணிமாளிகை அருகில்,
சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி 7299992699/ 8939499598



# நெருப்பை நெருப்பு எரிக்குமா?

## ராம பக்தனை சுடாத நெருப்பு

இராமாயணத்தில் ஒரு சமயம் நடைபெற்ற சம்பவம். ஸ்ரீ சீதா தேவியைக் கண்டு பிடித்து அவருக்கு நம்பிக்கையூட்டி அடையாளம் பெற்றுக் கொண்டாயிற்று. ராட்சதர்களை அழிந்து அவர்கள் பலாபலத்தை தெரிந்து கொண்டு என் கோபத்தையும் வெளிப்படுத்தியாயிற்று. ராவணன், விபீஷணன் எண்ணத்தையும் தெரிந்து கொண்டாயிற்று. அடியேனை குளிர் வித்த அக்னி பகவானின் பசியைத் தணிக்க வேண்டும் என்று எண்ணிய ஆஞ்சனேயர்,

அரக்கர் கூட்டம் தன்வாலில் இட்ட தீயினால் ராட்சகர்களின் மாளிகைகளையும், தோட்டங்களையும் எறித்தார். வீட்டுக்கு வீடு தாவினார், மந்திரி, சேனாதிபதியின் மாளிகைகளெல்லாம் பற்றி எரிந்தன.

விபீஷணன் திருமாளிகையை மட்டும் எதுவும் செய்யாது தாண்டிப் போனார். தங்க நகைகளெல்லாம் உருகிக் குழம்பாய் ஓடின.

திரிகூட மலையில் நின்று இதைப் பார்த்தார் மாருதி. யானைக் கொட்டடி எரிந்ததால் யானைகள் பிளிறிய படி காட்டுக்குள் ஓடின. குதிரைகளின் கனைப்பு காதைக் செவிடாக்கியது. தேர் சட்டங்கள் மளார்மளாரென முறிந்தன.

ஸ்ரீராமரை, ஸ்மரித்தபடி இதனை பார்த்துக் கொண்டிருந்த மாருதி, பின்னர் சமுத்திர நீரில் வாலை நனைத்து தீயை அணைத்தார்.

“ஐயோ, குரங்குப் புத்தி என்பது சரியாயிற்றே, இதே இலங்கையில் ஸ்ரீசீதாதேவியும் இருக்கிறார் என்பதை மறந்து போனேனே, இனி பிரபுவிடம் சென்று சொல்ல என்ன இருக்கிறது?

அடியேன் சமுத்திரத்தை தாண்டியது வீண். சொன்னதைச் செய்யாமல் அதிகப்படி அடியேன் தவறு செய்து விட்டேன்.

அடியேனும் இந்த அக்னியில் விழுந்து மடியலாம் என்றால் அக்னி என்னைத் தகிக்காமல் குளிர்ந்திருந்ததே, சமுத்திரத்தில் விழுந்து திமிகலங்களின் பசி தீர்ப்போமா?

திரும்பிப் போனால் அங்கதனும், ஜாம்பவானும், சுக்ரீவனும் வெறுப்பு காட்டுவார்களே, மற்றவர்களின் கேலிகளுக்குள்ளாகி உயிரோடு இருக்கலாமா? செய்தி கேட்டால் ஸ்ரீராமர் உயிர் தரிப்பாரா? ஸ்ரீ ராமரை பின்தொடர்ந்து ஸ்ரீலக்ஷ்மணனும், பரதன், சத்ருக்கனன், அவர்களின் தாய்மார்கள், தேவியார். ஐயோ, அடியேனின் அவசர புத்தி இஷ்வாகு வம்சத்தையே அழித்து விடப் போகிறதா?”

இப்படி அனுமன் துக்கப்பட்ட போது அவருடைய வலது கண்ணும், தோளும், தொடையும் துடித்தன. அருகிலிருந்த பொய்கையில் சற்றே எழும்பிய அன்னம் சிறகடித்தது. எங்கிருந்தோ ஒரு பழம் வேகமாக அவரருகில் உருண்டது.

இந்த சுப சகுனங்கள் மாருதிக்கு ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் தந்தன.

“நெருப்பை நெருப்பு எரிக்குமா? தெய்வ அனுகிரகத்தால் ஸ்ரீசீதா தேவி, பத்திரமாக இருப்பார், அக்னி அடியேனுக்கே குளிர்ந்த போது ஸ்ரீ ராம பத்னிக்கு குளிராதா? என்று நினைத்தார்.

அவ்வமையம் ஆகாயத்தில் சஞ்சரித்த சாரணர்கள்” இலங்கையில் ஒரு இடம் பாக்கி இல்லாமல் எரிகிறது. ஆனால் ஸ்ரீ சீதா தேவிக்கு மட்டும் ஆபத்தில்லை பார்” என்று பேசிக் கொண்டு போனார்கள். இதைக் கேட்ட மாருதிமனம் குளிர்ந்தார். எதற்கும் ஸ்ரீசீதா தேவியை மறுபடி தரிசித்தே திரும்புவதென்று முடிவெடுத்தார்.

சிம்சுபா விருட்சத்தடியில் அமர்ந்திருக்கும் ஸ்ரீஜானகியை நமஸ்கரித்தார் அனுமார்.

“தாயே, தங்களுக்கு என்னாவாயிற்றோ என்று சற்று கலங்கி, அஞ்சினேன், தங்களை தரிசிப்பது அடியேனின் பாக்கியமே, அடியேன் புறப்பட உத்தரவு தர வேண்டும்” என்று நமஸ்கரித்தார்.

“ஆஞ்சனேயா, நீர் ஒருவரே சகல சத்துருக்களையும் அழிக்கக்கூடியவர் என்பதை நிரூபித்தாய், இதனால் என் தைரியம் அதிகரித்தது வெற்றியுடன் சென்றுவா!” என்றார் ஸ்ரீசீதா தேவி.




ஆன்மிகமலர்
மெயில் புக்

www.aanmeegamalar.com



மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் “ஆன்மிகமலர் மெயில் புத்தகம்” பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்.

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின் அனைத்து புத்தகங்களையும் படித்து மகிழவும் டவுன்லோடு செய்யவும்
www.aanmeegamalar.com
MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...

# பிரம்மஹத்திதோஷமும், அது ஏற்படும் விதமும்



தோஷத்தில் பெரிய தோஷமே பிரம்மஹத்தி தான்.. எவருக்கும் எளிதில் இந்த தோஷம் இருக்காது.. மீறி இருந்தால் அவனுக்கு வாழ்க்கையே இருக்காது.. சனி+ குரு சேர்க்கை, சனி குரு சப்தம பார்வை சனி குரு திரிகோண பார்வை, எப்படி சனி குருவை நீசத்துடன் பார்த்தாலும் பிடித்தது பிரம்மஹத்தி என்று பொருள்..

இராமருக்கு பிரம்மஹத்தி பிடித்ததால் தான் திருவிடைமருதூர் வந்து சிவனை வணங்கினார்.

திருவிடைமருதூர் ஜோதி மகா லிங்கம் தான் ஒரே எளிய தீர்வு..

ஆனால் அந்த சிவனுக்கே பிரம்மஹத்தி பிடித்து தான் மேல்மலையனூர் அங்காளம்மன் உருவானது..

மும்மூர்த்திகளில் பிரம்மனுக்கு பெரிய கோயிலோ மக்கள் வணங்குவதோ இல்லை ஆனால் பிரம்மன் சாபம் தான் பிரம்மஹத்தி..

பரிகாரம் செய்தாலும் ஆண்டவன் கருணை இருந்தால் தான் இந்த தோஷம் போகும்.. பிரம்ம சாபத்திற்கு அவ்வுளவு வலிமை..

படைக்கும் மூர்த்தியான பிரம மனுக்கு அழிக்கும் நாளையும் அவனே தீர்மானிக்கிறான்.. பிரம்மன் படைத்த உயிரை நாம் இடையில் கொல்வதாலேயே நம்மை பிரம்ம சாபம் பிரம்மஹத்தியாக பிடித்து உயிரோடு கொல்லும் என்பது தான் இந்த தோஷத்தின் தன்மை..

## எவருகெல்லாம் பிரம்மஹத்தி வரும்...

● ஏழையை ஏமாற்றி அவன் சொத்தை அடைதல் ● பெண்ணை கற்பழித்து கொல்லுதல் ● ஐந்தறிவு ஜீவனை கொல்லுதல் ● பிராமணர் சாபம் அடைதல் ● நல்ல பாம்பை கொன்று எரித்தல் ● துடிக்க துடிக்க எந்த உயிரை கொன்றாலும் ● அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி பிறரை அழித்தல் ● பொய் சத்தியம்

மேற்கண்ட ஒருசில முக்கிய காரணங்களால் பிரம்மஹத் தியாக மனிதர்களை பிடித்துக் கொள்ளும். இந்த தோஷம் எல்லாம் வந்தால் வாழ்க்கையில் ஏற்படும் இடையூறுகள்..

## பிரம்மஹத்தியால் வரும் பாதிப்புகள்..

● தொழில் வேலை கடைசி வரை பாதிப்பு.. ● மனநிம்மதி கடைசி வரை இல்லாமை, ●மனஉலைச்சல் ● தகுதி இல்லாதவர்களிடம் செய்யாத தவறுக்கு தலைகுனிவு, ● தொடர்ந்து எதாவது நோய் உடலில் வந்து துன்புறுத்துவது.. ● இனம் புரியாத பயம். ● எதிர்காலம் என்னவாகும் என்ற புரியாத இருள் சூழ்ந்த கவலை, ● தூக்கமின்மை, ● புத்தி பேதலிப்பு, ● மனநிலை பாதித்தல் போன்ற தொடர் இடர்பாடுகள் ஒருவருக்கு பிரம்மஹத்தி தோஷம் இருப்பதற்கான அறிகுறியாகும்.

சுருக்கமாக கூறுவதானால், உயிரை கொல்வதற்கு தண்டனையாக உயிரோடு கொல்லுதல் என்பது தான் பிரம்மஹத்தி தோஷமாகும்.

– என்.ஷ்யாம்சுந்தர், திருமயிலை.

# உண்ணும் உணவே உணர்வுகளை வெளிப்படுத்தும்

- கடவுளிடம் முழுமையாக சரணடைந்து விடு. விரும்பிய அனைத்தும் உன்னை வந்தடையும்.
- தவறான செயல்களில் ஈடுபடாதே. அகந்தை எண்ணத்தால் அதை மறைக்கவும் முயலாதே.
- உன்னை கடவுளின் சிறு கருவியாக எண்ணிக் கொள். வாழ்வில் துன்பம் மறைவதைக் காண்பாய்.
- ஒருவன் உண்ணும் உணவைப் பொறுத்தே அவன் உள்ளத்தில் உணர்வுகளும் உண்டாகின்றன.
- எதிர்காலம் குறித்த கவலை வேண்டாம். அது நிச்சயமாக உனக்கு கை கொடுக்கும்.

– ரமணர்






ஆன்மிகமலர் மெயில் புக்



# குழந்தைகள் அழுது கொண்டு பிறப்பதற்கான காரணம்

கருவில் இருக்கும் குழந்தை, கருவரையில் இருக்கும் 3½ லிட்டர் தண்ணீரை மும்மூர்த்திகள் கங்கை என்று விளிக்கிறார்கள்.

கருவறையில் இருந்து வெளிவருவதற்கு முன் சிசு தனது இருக்கரங்களையும் தனது நாசிக்கு நேராக வைத்து இறைவா! நீயே கதி! என்று கருவறையில் தியானித்து கொண்டு இருக்கிறேன். நீ எனக்கு என்ன வரம் கொடுக்கப்போகிறாய்!" என்று கேட்குமாம்.

இதற்கு இறைவன் பிறந்த பயனை சொல்லி உலகை எட்டி பார்பதற்க்கு முன் இந்த உலகத்தின் பிரணவம் எனப்படும் விநாயகருக்கு உரிய மந்திரத்தை சொல்லிக்கொண்டே செல்" என்று கட்டளை இடுவாராம். இதனால் தான் பிறந்த குழந்தை உஅ உஅ என்று அழுது கொண்டே வெளிவரும். இப்படி அழுது கொண்டே வரும் குழந்தைக்கு ஆயுள் ஆரோக்கியம் தீர்காயுஸாம். அழாத குழந்தைகளை பெரியவர்கள் உகரம் சொல்ல கிள்ளி விடுவர்.




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841875720
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033 / 07299992699

## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8825844033
7299992699 / 8939499598

# உறுப்பினராகுங்கள்...

ஆன்மீக செய்திகளையும், இந்துமதத்தின் சிறப்புகளையும், பெருமைகளையும் உலகெங்கும் உள்ள மக்களுக்கு எளிமையாக எடுத்துச் செல்லும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட நமது

## ‘ஆன்மிகமலர் டிரஸ்ட்’டில் உறுப்பினராகுங்கள்

**Tamilnadu Government Redg.304/2016**

மாதந்தோறும் நன்கொடை சந்தா தரும் உறுப்பினர்கள், ஆன்மிகமலர் டிரஸ்ட்டின் சார்பில் வெளிவரும் ‘ஆன்மிகமலர்.காம்’ இணையதளம் மற்றும் ‘ஆன்மிகமலர் மெயில் புக்’ ஆகியவற்றின் ஆசிரியர் குழுவில் இணைந்து எங்களுடன் இறைபணி செய்யலாம். மாதம் இருமுறை வெளிவரும் இதழில் உறுப்பினர்களின் புகைப்படத்துடன், தொலைபேசிஎண், இமெயில் முகவரி (மாதிரி படம் கீழே) போன்றவையும் தொடர்ந்து வெளியிடப்படும். 20 நபருக்கும் குறைவான உறுப்பினர்கள் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

### டிடி., காசோலை அனுப்புபவர்கள்

AANMEEGA MALAR TRUST
16/18, BHARATHISWARAR COLONY,
4TH STREET, KODAMBAKKAM, CHENNAI 600024

### ஆன்லைனில் அனுப்ப விரும்புபவர்கள்

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106 / MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

## தொடர்பு கொள்ளவும் போன்: 088258 44033

காலை7மணி முதல்
மாலை5மணி வரை
இந்திய நேரம்

### இதழில் பிரசுரிக்கு உறுப்பினர் (மாதிரி படம்)



பெயர்: கீதாராணி
சென்னை, போன்: 7770077700
e-mail: geeeethala@gmail.com



பெயர்: ஷ்யாம்சுந்தர்
சென்னை, போன்: 7347077703
e-mail: shyammmm@gmail.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் உறுப்பினர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய உறுப்பினர் அடையாள அட்டை வழங்கப்படும், உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட இந்துசமய ஆன்மிக நிகழ்ச்சிகள் நமது மின்னிதழிலும், இணையதளத்திலும் பிரசுரிக்கப்படும். உறுப்பினர்களின் கருத்துகள் பரிசீலிக்கப்படும். உறுப்பினர்கள் நமது இதழின் ஆசிரியர் குழுவில் ஒன்றிணைக்கப்படுவார்கள்.

# ஹிந்து கலாச்சாரப்படி பிறந்த நாள் கொண்டாடுவதன் மகத்துவம்

தற்போதுநாம் அனைவரும் எவ்வாறு பிறந்த நாள் கொண்டாடுகிறோம் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனால் முழு பலனைப் பெற பிறந்த நாளை எவ்வாறு கொண்டாட வேண்டும் என்பதை விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கம்.

பிறந்த நாளைக் கொண்டாடுவதென்பது, கடந்த வருடத்தில் ஆன்மீக சாதனை செய்ய முடிந்ததற்கு இறைவனுக்கு நன்றி செலுத்தி, வரப் போகும் வருடத்தில் இறையருள் வேண்டி பிரார்த்தனை செய்வதாகும். ஆங்கில தேதிப்படி கொண்டாடாமல் ஹிந்து பஞ்சாங்கப்படி, அதாவது அவரவர் பிறந்த நட்சத்திரப்படி பிறந்த நாளைக் கொண்டாடுவதன் மூலம் அதிக பயன் ஏற்படுகிறது. ஹிந்து பஞ் சாங்கப்படியான தேதியில் பிரம்மாண்டத்திலுள்ள அதிர்வலைகளும், பிறந்த நாள் கொண்டடுபவரின் அதிர்வலைகளும் ஒத்துப் போகின்றன.அன்றைய தினம் கிடைக்கும் பெரியவர்கள், உறவினர்கள் ஆகியோரின் நல்லாசிகளால் அதிகபட்ச நன்மை ஏற்படுகிறது. அன்றைய தினம் பிரம்மாண்டத்திலுள்ள அதிர்வலைகள் அன்று பிறந்தவரின் தன்மைகளோடு ஒத்துப் போவதால் அன்று செய்யப்படும் சாத்வீக சைதன்யம் நிரம்பிய சடங்குகள் அந்நபரின் ஆழ்மனதில் பதிகின்றது. அதனால், வருங்கலத்தில் ஏற்படக் கூடிய எந்த கஷ்ட நஷ்டத்தையும் தாக்கு தடையையும் எதிர் கொள்ளக் கூடிய ஆத்மா பலம் பெருகுகிறது.

மேற்கத்தியவழக்கப்படி ஆங்கில தேதியில், கேக் மீது மெழுகுவர்த்திஏற்றுவதால், சுற்றுப்புறச் சூழலில் கருப்பு அதிர்வலைகள் பரவி, அச் சூழலை மாசுபடுத்துகின்றன. கத்தியைக் கொண்டு கேக் வெட்டுவதால் தமோ குண (தீய) அதிர்வலைகள் அதைச் சுற்றி ஏற்படுகின்றன. அதனால், கேக்கை வெட்டுபவரின் மீது தமோ குண அதிர்வலைகள் சூழ்ந்து கொள்கின்றன. அவருடைய புத்தியைச் சுற்றி கருப்பு ஆவரணம் ஏற்படுகிறது. தமோகுண கருப்பு ஆவரணத்தால் மாயாவி அதிர்வலைகள் வெளிப்படுகின்றன.அதனால், கேக் வெட்டுபவருக்கு ஒரு மாயை நிறைந்த சுகம் ஏற்படுகிறது. அதன் மூலம் தீய சக்திகள் அவரின் மனம், புத்தியை தாக்குகின்றன. நமது ஹிந்து தர்மப்படி எப்போதும் நல்ல நாளன்று விளக்கை ஏற்றுவதே உகந்த, மங்களகரமான, தெய்வீக செயலாகும். எப்போதும் ஊதி அனைக்க மாட்டோம்.



### சம்பந்தப்பட்ட உடல்:

ஆங்கில வழக்கப்படி : உடல் மட்டும்
ஹிந்து வழக்கப்படி : உடல் 5%,
சூட்சும உடல் 95%

### உடலின் மேல் ஏற்படும் விளைவு:

**ஆங்கில வழக்கப்படி:** உடலோடு மட்டும் சம்பந்தப் பட்டிருப்பதால் ஸாத்வீக அதிர்வலைகளின்பயன் மிகக் குறைவே. அதனால் ராஜதம ஆவரணம்குறையாது.

**ஹிந்து வழக்கப்படி:** சூட்சும உடலின் சாத்வீகத் தன்மை அதிகரிக்கின்றது.

ஹிந்து வழக்கப்படி அன்றைய தினம் முழுவதும் சாத்வீக அதிர்வலைகள் தொடர்ந்து கிடைப்பதால் ஸ்தூலஉடலின் சுத்தி ஏற்படுகிறது. ஆரத்தி எடுப்பதன் மூலம் சூஷுமனா நாடி விழிப்படைகிறது. 60% மேலே ஆன்மீக நிலை எட்டியவருக்கு அன்று முழுவதும் சூஷும்னா நாடி விழிப்படைந்த நிலையிலேயே இருக்கிறது.

ஹிந்துகலாச்சாரப்படி பிறந்த நாளை கொண்டாடலாம்

### கொண்டாடும் முறை:

எண்ணெய் தேய்த்து ஆடைகளோடு மங்கள ஸ்நானம் செய்ய வேண்டும். கங்கையின் புனித நீர் ஏன் உடல் மற்றும் மனதை தூய்மைப்படுத்துகிறது என்ற உணர்வோடு குளிக்க வேண்டும்.

குளித்த பின் புத்தாடைகள் உடுத்த வேண்டும்.

பெற்றோருக்கும் பெரியவர் களுக்கும் நமஸ்காரம் செய்ய வேண்டும்.

குலதெய்வத்திற்கு உள்ளார்ந்த பக்தியோடு அபிஷேகம் மற்றும் பூஜை செய்ய வேண்டும்.

ஆரத்தி செய்யும் போது செய் பவர் மற்றும் செய்யப்படுபவர் ஆகிய இருவரும், எங்கள் மூலமாக இறைவனே இச் செயலை செய்து எங்களுக்கு அருளாசி வழங்குகிறார் என்ற பக்தியுணர்வைக் கொள்ள வேண் டும். ஆரத்தி முடிந்தவுடன் அக்ஷ தைத் தலையிலிட வேண்டும்.

பரிசுகொடுப்பவர், ‘நான் கொடுக்கிறேன்’ என்ற அஹம் பாவத்தை விட்டு விட்டு ப்ரதி பலனை எதிர்பாராமல் கொடுக்க வேண்டும். பரிசு வாங்குபவரும் ‘இது இறைவனின் வரப்ரசாதம்’ என்ற உணர்வோடு வாங்க வேண்டும். அப்பொழுதுதான் கொடுக்கல்வாங்கல் கணக்கு வழக்கு ஏற்படாது.

குளிக்கும் போது உடுத்திய உடையை ஒரு பக்தருக்கோ, நாடு மற்றும் தர்மத்திற்காக உழைப்பவருக்கோ தானமாக கொடுக்க வேண்டும்.

இந்த விதமாக நம் உன்னத பாரத கலாச்சாரப்படி பிறந்த நாள் கொண்டாடுவதன் மூலம் அதிக நன்மை விளைகிறது.

மேலும் விவரங்களுக்கு:
www.hindujagruti.org
தொ.எண்: 9380949626

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# கொடுத்த வாக்கை மறந்த ராமானுஜர்

# வாக்கை நிறைவேற்றிய பெருமாள்



ஸ்ரீ ரங்கத்தில் உலகம் போற்றும் ஆசார்யன் ஸ்ரீமத் ராமானுஜர், ஒரு சமயம் திருக்கோவிலை வலம் வந்து கொண்டிருந்தார். அப்போது மடப் பள்ளியிலிருந்து ஏதோ சச்சரவுபோன்று சத்தம் கேட்டது. எம்பெருமானார் மெதுவாக சத்தம் வரும் இடத்திற்குச் சென்றார். அவரைக் கண்டதும் அனைவரும் வணங்கினர்.

மடப்பள்ளியில் இருந்தவரைப் பார்த்து

“என்ன விஷயம்?” என்று வினவினார்.

அவர் இன்னொருவரைக் காட்டிச் சொன்னார் இவர் நமது கோவிலில் கைங்கர்யம் செய்பவர். இவ்வளவு நாட்களாக இவரது கைங்கர்யத்திற்காக இவருக்கு ஒரு பட்டை ப்ரசாதம் வழங்கப்பட்டு வந்தது. இப்போது அதிகம் வேண்டும் என்று கேட்கிறார். அப்படியெல்லாம் கொடுப்பதற்கு நமக்கு அதிகாரம் இல்லை.

எம்பெருமானார் திரும்பி அவரைப் பார்த்தார்.

அவரும் ராமானுஜரை வணங்கிவிட்டு சொன்னார்.

“ஸ்வாமி, அவர் சொல்றது உண்மதான். நான் ப்ரும்மச்சாரியாய் இருந்த வரையில் எனக்கு ஒரு பட்டை ப்ரசாதம் போதுமாய் இருந்தது. இப்போது எனக்குக் கல்யாணமாகிடுச்சு. கோவில் வேலைக்கே நேரம் சரியாப் போயிடுது. அதனால, நான் வேற வேலைக்கும் போகமுடியறதில்ல. ஒரு பட்டை ப்ரசாதம் என் குடும்பத்துக்குப் போதல. அதனால் கூட ஒரு பட்டை ப்ரசாதம் கிடைச்சா கொஞ்சம் கஷ்டப்படாம ஜீவனம் போகும் ஸ்வாமி. ஆனா, இவர் தரமுடியாதுன்னு சொல்றார்” என்றார்.

கோவிலின் பொது விதிகளை ஒருவருக்காக மீறுவது சரியில்லை. ராமானுஜர் சற்று யோசித்தார்.

“சரி, உனக்கு உள்ள இருக்கும் பெருமாள் மேல நம்பிக்கை இருக்கா?”

“இல்ல ஸ்வாமி”

அனைவருக்கும் தூக்கிவாரிப் போட்டது.

“என்னப்பா, கோவில்ல கைங்கர்யம் பண்ற. பெருமாள்மேல் நம்பிக்கை இல்லைங்கற. எப்படிப்பா?”

“ஆமா ஸ்வாமி, எனக்குப் பெருமாள் மேல நம்பிக்கை இல்லதான். ஆனா, உங்களைத்தான் நம்பறேன். நீங்கதான் என் பெருமாள்.”

“அப்பாடா, சரி. என்னை நம்பறயோ? உனக்கு யார் மேலயாவது நம்பிக்கை இருந்தா சரிதான். கோவில்ல, பாசுரம், பூஜை சப்தம், பாடல்கள், வேதம், உபன்யாசங்கள் இதெல்லாம்தான் கேக்கணும். சண்டை சச்சரவுச் சத்தமெல்லாம் கோவில்ல கேக்கக்கூடாது.

நீ சண்டை போடாம கிளம்பிப் போ. என்னை நம்புறதானே? நான் பாத்துக்கறேன்”

“சரி ஸ்வாமி,” மீண்டும் விழுந்து வணங்கி விட்டுப் போய்விட்டான்.



அவனிடம் சொன்னாரே தவிர, எம்பெருமானாரும் பணிகளில் மூழ்கிவிட்டார். அந்தப்பையனிடம் சொன்னது மறந்துவிட்டது.

இது நடந்து ஒரு வருஷம் இருக்கும். ஒருநாள் அம்மா மண்டபத்தில் ஸ்நானம் செய்துவிட்டு வந்து கொண்டிருந்தார் உடையவர்.

அப்போது எதிரில் அந்தப் பையன் வந்தான். உடையவரைக் கண்டதும், மகிழ்ச்சியோடு விழுந்து வணங்கினான்.

அவனைப் பார்த்ததும் சட்டென்று முன்பு தான் பார்த்துக்கொள்கிறேன் என்று சொன்னது நினைவுக்கு வந்தது. அடடா, மறந்து விட்டோமே. என்று வருந்தினார்.

அவனைப் பார்த்து “என்னப்பா, காலக்ஷேபங்கள் எல்லாம் எப்படிப் போகிறது?”

“ரொம்ப சந்தோஷமா இருக்கேன் ஸ்வாமி.”

“தினமும் நீங்க அனுப்பற பையன் வந்து எங்களுக்குத் தேவைக்குமேல ப்ரசாதத்தை வீட்டுக்கே கொண்டுவந்து கொடுத்துட்டுப் போறான். தேவரீரோட கருணையே கருணை..”

தூக்கிவாரிப்போட்டது உடையவருக்கு. “தினமும் ஒருத்தர் வராரா? நான் யாரையும் அனுப்பலையேப்பா.”



“நீங்க அனுப்பினதா சொல்லி ஒருத்தர் தினமும் ப்ரசாதம் கொண்டுவராரே ஸ்வாமி. அவர் பேர் ரங்கராஜன்” என்று சொன்னர்.

“ப்ரசாதம் கொடுத்துட்டு நின்னு கோவில் தூக்கையெல்லாம் திருப்பி வாங்கிண்டு போயிடுவார்.”

உடையவருக்குக் காலுக்குக் கீழ் பூமி நழுவியது. அப்படியே உட்கார்ந்து விட்டார் உடையவர். சொன்ன எனக்கே மறந்துவிட்டது. ரங்கநாதா, உனக்கேன் இவ்ளோ கருணை என்று நெகிழ்ந்துபோய் அரற்ற ஆரம்பித்தார்.

குரு ஒருவருக்கும் கொடுக்கும் வாக்கை வரிந்து கட்டிக் கொண்டு இறைவன் நிறைவேற்றுகிறான்.

– ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின் உபன்யாசத்திலிருந்து தொகுத்தது.

## இறைவனாக காட்சி தந்த

# மஹா பெரியவா

பல வருடங்களுக்கு முன் நடந்த நிகழ்வு இது...

மஹாபெரியவா அப்போது காஞ்சி ஸ்ரீமடத்தில் இருந்தார். மாலை வேளை.

மடத்து வாசலில் ஒரு சைக்கிள் ரிக்‌ஷா வந்து நின்றது. ரிக்‌ஷா ஓட்டி கீழிறங்கி வண்டியில் அமர்ந்திருந்த பெரியவர் ஒருவரைக் கைத்தாங்கலாக கீழே இறக்கி விட்டான். ‘என்னை மடத்துக்குள் கொண்டு விடப்பா’ என்பதாக அவனிடம் ஜாடையும் பேச்சும் கலந்து பெரியவர் சொல்ல மடத்துக்குள் அழைத்துச் செல்ல முற்பட்டான் ரிக்‌ஷா ஓட்டி.

கலைந்த தலையும் அழுக்கு லுங்கி அணிந்த படியும் இருந்ததால், தான் இதே கோலத்தில் ஸ்ரீமடத்துக்குள் செல்வது உசிதமாக இருக்காது என்று ரிக்‌ஷா ஓட்டியே தீர்மானித்தான் போலும். எனவே, அங்கிருந்த மடத்துச் சிப்பந்தி ஒருவரை அழைத்து ‘ஐயா இந்தப் பெரியவரு மடத்து சாமியைப் (மஹாபெரியவா) பார்க்கணுமாம். கூட்டியாந்திருக்கேன். கையைப் புடிச்சுக் கூட்டினு போ. சாமியைப் பார்த்து முடிச்சதும் வெளில என் வண்டி கிட்ட கொண்டு வுட்டுரு’ என்று சொல்லிட்டு வெளியே போனான்.

பெரியவர் கைமாறினார்.

பெரியவருக்கு எப்படியும் வயது எண்பதுக்கு மேல் இருக்கும் என்று தோற்றம் சொன்னது.

உள்ளடங்கிய கண்கள், கோணல் மாணலாகக் கட்டிய நாலு முழ வேஷ்டி.. கசங்கிய வெள்ளைச் சட்டை. மேல் சட்டைப் பைக்குள் ஒரு மூக்குப் பொடி டப்பாவும் பத்துப் பதினைந்து ரூபாயும் தெரிந்தன.

தனியாக நடப்பதற்கே பெரிதும் சிரமப்பட்ட அந்தப் பெரியவரைக் கைத்தாங்கலாகப் பிடித்து, பெரியவா இருந்த இடம் அருகே விட்டார் சிப்பந்தி. மேடை போல் இருந்த ஓரிடத்தில் வசதியாக உட்கார்ந்து கொண்டார் பெரியவர். வலக் கையை நெற்றியில் வைத்து பெரியவா அமர்ந்திருந்த இடத்தைப் பார்த்தார்.

தான் இருந்த இடத்துக்கு எதிரே மஹாபெரியவா அமர்ந்திருப்பது அரைகுறையாக அவருக்குத் தெரிந்தது. இருந்த இடத்தில் இருந்தபடியே கன்னத்தில் போட்டுக் கொண்டு தரிசித்தார் பெரியவர்.

பெரியவரைப் பார்த்துப் புன்னகைத்தார் மஹாபெரியவா. இந்தப் பெரியவர் இந்த சாயங்கால வேளையில் ஏன் இங்கே வந்திருக்கிறார் என்பதை அறியாதவரா அந்த மகான்?

ஒரு சிஷ்யன் ஓடோடி வந்து பெரியவா அருகே நின்றான். வாய் பொத்தி, ஏதோ ஒரு தகவலை குசுகுசுப்பாகச் சொன்னான். அதாவது பெரியவா தரிசனத்துக்காக அப்போது ஸ்ரீமடத்துக்கு சில முக்கிய பிரமுகர்கள் வந்திருப்பதாகவும், வெளியே அவர்கள் காத்திருப்பதாகவும் தகவல் சொன்னான். அன்று யாரையும் பார்க்க இயலாது என்றும் மறுநாள் காலை வருமாறும் தகவல் சொல்லி அனுப்பினார் மஹாபெரியவா. சிஷ்யன் ஓடிப் போய் விட்டான்.

தரிசனத்துக்கு வந்திருந்த ஒரு சிலருக்கும் பிரசாதம் கொடுத்து அனுப்பிவிட்டார் மஹா பெரியவா.

இப்போது அங்கு இருப்பது மஹாபெரியவாளும், உள்ளூர்ப் பெரியவரும் தான்.

இன்னமும் அந்தப் பெரியவர் தன் கண்களை இடுக்கிக் கொண்டு மஹாபெரியவா அமர்ந்திருந்த இடத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

மஹாபெரியவா தன் ஸ்தானத்தில் இருந்து எழுந்தார். இறங்கினார். பெரியவரை நோக்கி நடந்தார்.

சிஷ்யர்கள் பிரமித்துப் போனார்கள். ஏனென்றால் எந்த ஒரு பக்தருக்கும் அனுக்ரஹம் செய்வதற்காக மஹாபெரியவா இது போல் எழுந்து சென்று அவர்கள் பார்த்ததில்லை.

காஞ்சிபுரத்துப் பெரியவர் தான் அமர்ந்த இடத்திலேயே இருக்கிறார். தள்ளாத வயது அல்லவா! அவர் அருகில் சென்ற மஹாபெரியவா தன் தலையில் வில்வமாலை ஒன்றை வைத்துக் கொண்டு ‘தெரியறதா” என்று கேட்டார் தீர்க்கமாக.

கண்களை மிகவும் இடுக்கிக் கொண்டு பார்த்த பெரியவர் ‘தெரியலை’ என்றார்.

இதை அடுத்து தனக்கும் அந்த பெரியவருக்கும் நடுவில் இருந்த இடைவெளியை இன்னும் கொஞ்சம் சுருக்கினார் மஹாபெரியவா. அருகில் இருந்த ஒரு புத்தம் புது ரோஜா மாலையைக் கையில் எடுத்தார் மஹாபெரியவா. தலையில் வைத்துக் கொண்டார். அதை பெரியவா தன் சிரசில் அணிந்த பிறகு அந்த ரோஜா மாலை இன்னும் அழகாகத் தெரிந்தது. இப்போது பெரியவரைப் பார்த்து ‘இப்ப தெரியறதா? என்று கேட்டார் மஹாபெரியவா.

ரொம்பவும் சிரமப்பட்டு உற்றுப் பார்த்த பெரியவர் ‘தெரியலை’ என்றார் மீண்டும்.

ரோஜா மாலையை எடுத்துத் தன் சிஷ்யனிடம் நீட்டினார் பெரியவா. அவன் ஓடோடி வந்து அதை வாங்கிக் கொண்டான். பிறகு ஒரு காஷாய வஸ்திரத்தை எடுத்து அதைத் தன் தலையில் வைத்துக் கொண்டார் மஹாபெரியவா. ‘இப்ப தெரியறதா. பாருங்கோ” என்றார் மஹாபெரியவா.

“ஊஹூம்” என்பதாகத் தன் உதட்டைப் பிதுக்கினார் பெரியவர்.

அப்போது அந்த இடத்தில் இருந்த சிஷ்யர்கள் குழம்பிப் போனார்கள். ‘தெரியறதா? என்று பெரியவா எதைக் கேட்கிறார், ‘தெரியல’ என்று பெரியவர் எதைச் சொல்கிறார் என்பது புரியாமல் தவித்துப் போனார்கள். சிஷ்யர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் கேள்விக் குறியுடன் பார்த்துக் கொண்டனர்.

அதற்குள் யாரோ ஒரு சில பக்தர்கள் பெரியவா இருந்த இடத்துக்குள் நுழைய முற்பட்டு அவரை தரிசிக்க யத்தனித்தார்கள். இதை அறிந்த பெரியவா அவர்களை சைகை காட்டி வெளியே அனுப்பினார். சிஷ்யர்களும் அவர்களிடம் ஓடிப் போய் ‘இப்ப பெரியவா உங்களைப் பார்க்க மாட்டார்’ என்று சொல்லி அனுப்பினார்.

அந்த இடத்தில் பெரும் அமைதி நிலவியது.

தான் எதிர்பார்த்து வந்தது இன்னமும் நிறைவேற வில்லை என்பதாக இருந்தது காஞ்சிபுரத்துப் பெரியவரின் முகம்.

காஞ்சிபுரத்துப் பெரியவர் எதை எதிர்பார்த்து வந்திருக்கிறார்?

அது மகா பெரியவாளுக்கும் அந்தப் பெரியவருக்கும் மட்டுமே தெரிந்த ரகசியம்.

தண்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, பெரிய பெரிய ருத்திராட்ச மணிகளால் கோர்த்து வைக்கப்பட்டிருந்த ஒரு மாலையை எடுத்துத் தலையில் வைத்தவாறு ‘தெரியறதா’ என்று கேட்டார் பெரியவா.

அவ்வளவு தான் அது வரை ஏமாந்து போயிருந்த பெரியவரின் முகம் திடீரென பிரகாசம் ஆனது. அவரது விழிகளில் இருந்து தாரை தாரையாக நீர் வழிந்தது. ஏதேதோ பேச வாய் எடுத்தவருக்கு அந்தக் கணத்தில் அது முடியாமல் போனது.

மெள்ளச் சுதாரித்துக் கொண்டு ‘எல்லாமே தெரியறது பெரியவா. நல்லா தெரியறது பெரியவா’ என்று கன்னத்தில் மாறி மாறி அறைந்து கொண்டு அந்த பரப்பிரம்மத்தை நன்றியுடன் பார்த்தார். தன்



இரு கைகளையும் கஷ்டப்பட்டு உயரே தூக்கி நெகிழ்ச்சியுடன் கும்பிட்டார் பெரியவர். பிறகு உடல் வளைந்து கொடுக்காவிட்டாலும் சிரமப்பட்டுத் தரையில் விழுந்து அந்தக் கருணை தெய்வத்தை உளமார வணங்கினார்.

பிறகு அந்தப் பெரியவரே மெள்ள எழுந்தார். பெரியவாளுக்கு முன்பாக நின்றார். அவரது திருமுகத்தையே நன்றியுடன் பார்த்துக் கொண் டிருந்தார். கண்களில் இருந்து கசியத் துவங்கிய நீர் வரத்து இன்னும் நிற்கவில்லை.

விரலைச் சொடுக்கி, சிஷ்யர்களை அருகே வரச் சொன்னார் மஹாபெரியவா. ஓடோடி வந்தனர்.

'இவா வந்த ரிக்ஷா வெளில நிக்கும். அதுல பத்திரமா இவரை ஏத்தி அனுப்ச்சுட்டு வாங்கோ. சந்தோஷமாப் புறப்படட்டும்' என்று சொல்லிவிட்டு விறுவிறுவென்று அங்கிருந்து வெளியேறியது அந்தக் கலியுக தெய்வம்.

உடலிலும் உள்ளத்திலும் சந்தோஷம் கொப்பளித்த பெரியவரைக் கைத்தாங்கலாகக் கூட்டிக் கொண்டு ஸ்ரீமடத்தின் வாசலுக்குப் போனார்கள் சிஷ்யர்கள்.

தான் கூட்டி வந்த பெரியவர் வெளியே வருவதைப் பார்த்தவுடன், தரையில் குத்துக்காலிட்டு அமர்ந் திருந்த ரிக்ஷாக்காரன் ஓடோடி வந்தான். 'வுடுங்க சாமி இனிமே நா அவரை இட்டுகினு போயிடறேன்' என்று சொல்லிவிட்டு, ரிக்ஷாவுக்குள் பெரியவர் ஏறி அமர்வதற்கு உதவி செய்தான்.

பெரியவரை ரிக்ஷாவுக்குள் ஏற்றி அனுப்பிய சிஷ்யர்கள் இருவரும் மடத்துக்குள் நுழையும் போது பேசிக் கொண்டார்கள்.

'உனக்குப் புரியறதாடா பெரியவா 'தெரியற தா?ன்னு எதைக் கேட்டார்னு? முதலாமவன்.

இல்லேடா என்னைவிட ரொம்ப வருஷமா நீ பெரியவாளுக்குக் கைங்கர்யம் பண்ணிண்டு இருக்கே.. உனக்கே புரியலேன்னா எனக்கு எப்படிப் புரியும்? இது இரண்டாமவன்.

நானும் எத்தனையோ பேரைப் பார்த்திருக்கேன். ஆனா, இது மாதிரி ஒரு அனுபவத்தைப் பார்த்த தில்லை. பெரியவா தெரியறதா?ன்னு எதைக் கேட்டார்னும் புரியல. 'தெரியல'னு அடிக்கடி அந்தப் பெரியவர் எதைச் சொன்னார்னும் புரியலை. ஆனா அவர் கண்ல ஜலம் வந்ததைப் பார்த்த உடனே என் கண்களும் ஈரமாயிடுச்சு. சமாச்சாரம்தான் என்னன்னு புரியாம ஒரே குழப்பமா இருக்கு' என்று சொன்ன முதலாமவன் கொட்டாவி விட்டுக் கொண்டு தூங்கப் போயிட்டான்.

இதற்கான விளக்கம் அடுத்த நாளே அனை வருக்கும் தெரிந்தது.

அடுத்த நாள் அதிகாலை அந்தப் பெரியவர் இறைவனடி சேர்ந்த செய்தி ஸ்ரீமடத்துக்கு யார் மூலமாகவோ வந்து சேர்ந்தது.

முதல் நாள் மாலை ஸ்ரீமடத்துக்கு இந்தப் பெரிய வர் வந்த போது அவருக்கு உதவிய ஊழியர்களும் சிப்பந்திகளும் சிஷ்யர்களும் ஏகத்துக்கும் அதிர்ந்து போனார்கள்.

அனுபவம் வாய்ந்த ஸ்ரீமடத்து காரியதரிசிகளின் பேச்சில் இருந்து இதற்கான விளக்கம் அனை வருக்கும் கிடைத்தது.

தன் வாழ்நாளின் கடைசி நிமிடங்களில் இருப்பதை எப்படியோ உணர்ந்து கொண்டார் காஞ்சிபுரத்துப் பெரியவர். தன் தேகம் இந்தப் பூவுலகில் இருந்து மறைவதற்கு முன் கயிலைக் காட்சியைக் கண்டு தரிசிக்க விரும்பியிருக்கிறார். தான் விரும்பும் தரிசனம் எப்படியாவது மஹா பெரியவாளிடம் கிடைக்கும் என்று பரிபூரணமாக நம்பி ஒரு ரிக்ஷாக்காரரை அமர்த்திக் கொண்டு ஸ்ரீமடத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறார்.

தன்னை நாடி வந்த உள்ளூர்ப்பெரியவரின் ஏக்கத்தைத் தன் ஞான திருஷ்டியால் அறிந்து கொண்ட மஹாபெரியவா, கயிலைவாசியான அந்த ஈசனின் சொரூபத்தை அவருக்குக் காட்டி அனுக்ரஹித்து மோட்ச கதி கொடுத்தார் என்று இதற்கு விளக்கம் சொல்லப்பட்டது.

ஆக, பெரியவாளின் திருமுகத்தில் ஈஸ்வர தரிசனத்தைக் கண்டு பரவசம் கொள்ள வேண்டும் என்பதற்காகவே அந்தப் பெரியவர் ஸ்ரீமடத்துக்கு வந்திருந்தார் என்பது உறுதியானது.

சிவபெருமானின் ஓர் அம்சம் தான் மஹா பெரியவா என்று சொல்லப்படுவதுண்டு. இதை அனுபவப்பூர்வமாக உணர்ந்த சில பக்தர்கள் மஹா பெரியவாளை தரிசித்து, அத்தகைய தரிசனம் பெற்றிருக்கிறார்கள். அந்த வகையில் காஞ் சிபுரத்துப் பெரியவர் மறைவதற்குச் சில மணி நேரங்களுக்கு முன், அவருக்கு அத்தகைய ஒரு தரிசனத்தைக் காட்டி அருளி அருக்கிறார் மஹா பெரியவா.

அதனால் தான் ஒவ்வொரு முறையும் 'தெரிய றதா? என்று பெரியவா கேட்ட போதும் 'தெரியல' என்று சொல்லிக் கொண்டே வந்தவர், ருத்திராட்ச மாலையை எடுத்துத் தன் தலையில் வைத்துக் கொண்டதும், சாட்சாத் அந்த சிவபெருமானே பெரியவா முகத்திலே தரிசனம் தந்திருக்கிறார். இதன் பின்னால் அந்தக் காஞ்சிபுரத்துப் பெரியவருக்கு மோட்சம் கிட்டாமலா இருக்கும்?

– நன்றி:
பெரியவா அற்புதம்





## ஒவ்வொரு நட்சத்திரத்திற்குரிய

# ருத்திராட்ச மாலை

ருத்ராட்சை சிவனின் வடிவமாகவே கருதி பூஜைகள் செய்வர். பல முகங்களில் ருத்ராட்சங்கள் உள்ளன. நட்சத்திரங்கள் இருபத்தி ஏழாகும். ஒருவன் இந்த 27 நட்சத்திரங்களில் ஒன்றில் தான் பிறப்பான் என்பது நாம் அனைவருக்கும் தெரிந்ததே, அனால் 27 நட்சத்திரத்தில் பிறந்தவர்களும் அணிய வேண்டிய ருத்ராட்சங்கள் மாறுபடும். எந்த நட்சத்திரதாரர் எந்த ருத்ராட்சத்தை அணிய வேண்டும் என்பதை பாப்போம்.

1. அஸ்வினி ........................ ஒன்பது முகம்.
2. பரணி ......... ஆறுமுகம், பதிமூன்று முகம்.
3. கார்த்திகை ................பனிரெண்டு முகம்.
4. ரோஹிணி .......................இரண்டு முகம்.
5. மிருகசீரிஷம் ...................... மூன்று முகம்.
6. திருவாதிரை .........................எட்டு முகம்.
7. புனர்பூசம் ...........................ஐந்து முகம்.
8. பூசம்.....................................ஏழு முகம்.
9. ஆயில்யம் ........................நான்கு முகம்.
10. மகம் ............................ ஒன்பது முகம்.
11. பூரம் ........... ஆறுமுகம், பதிமூன்று முகம்.
12. உத்திரம்......................பனிரெண்டு முகம்
13. ஹஸ்தம் ..........................இரண்டு முகம்.
14. சித்திரை ........................... மூன்று முகம்.
15. ஸ்வாதி ..............................எட்டு முகம்.
16. விசாகம் ..............................ஐந்து முகம்.
17. அனுஷம் ...............................ஏழு முகம்.
18. கேட்டை ..........................நான்கு முகம்.
19. மூலம் ...........................ஒன்பது முகம்.
20. பூராடம்........ ஆறுமுகம். பதிமூன்று முகம்.
21. உத்திராடம்............... பனிரெண்டு முகம்.
22. திருவோணம் ................. இரண்டு முகம்.
23. அவிட்டம் .......................... மூன்று முகம்.
24. சதயம் ................................எட்டு முகம்.
25. பூரட்டாதி ..............................ஐந்து முகம்.
26. உத்திரட்டாதி ..........................ஏழு முகம்.
27. ரேவதி..............................நான்கு முகம்

அந்தந்த நட்சத்திரதாரர்கள் அவரவருக்கு உரிய ருத்ராட்சத்தை அணிந்து பயன் பெறுங்கள்.

# முக்தி நிலை அடைய நம்மை நாம் தேடுவோம்

நிலப்பரப்பை பற்றியும் காடுகளை பற்றியும் நதிகள் அருவிகள், நீரோடைகள் போன்றவைகளை பற்றியும் தெளிவாக அறிந்து கொள்ளும் அறிவியலுக்கு பெயர் பூகோளம். அதே போன்று கிரகங்கள் நட்சத்திரங்கள் போன்றவற்றை தெரிந்து கொள்ளுகின்ற அறிவு துறை வானவியலாகும். இப்படி ஒவ்வொரு பொருளுக்கும் அதனதன் முழுமையான விபரங்கள் அடங்கியவற்றிற்கு பொதுவான பெயர் உண்டு. ஆத்மாவை அறிய, பிரம்மாவை அறிய படைப்பின் இலக் கணத்தை அறிய உதவுவது ஆன்மீகமாகும்.

ஆன்மிகம் என்றவுடன் அது கடவுளை பற்றிய விஷயம். பக்தி மார்க்கத்தை விளக்கமாக கூறும் சங்கதி என்று தான் பலரும் கருதுகிறார்கள். கடவுளை பற்றி கூறுவது ஆன்மிகம் தான். அதே நேரம் கடவுள் தேவையில்லை என்று மறுத்து பேசுவதும் கூட ஆன்மீகத்தில் ஒரு அங்கம் என்பதை அனைவரும் உணர வேண்டும். காரணம் ஆன்மிகம் என்பது ஆத்மாவின் இயல்பை பற்றி, ஆத்மாவின் உயர்வை பற்றி, ஆத்மாவின் எல்லையை பற்றி மிக அதிகமாக ஆராய்ச்சி செய்வதாகும். அந்த ஆய்வின் முடிவு கடவுளை நோக்கி சென்றாலும் கடவுளை தவிர்த்து முக்தியை நோக்கி சென்றாலும் அதன் பெயர் ஆன்மிகம் தான்.

வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளாக இருக்கட்டும். அறிவியலின் புதிய கண்டுபிடிப்புகளாக இருக்கட்டும். அல்லது வேறு எதுவாக இருந்தாலும் அவைகளின் அடித்தளமாக இருப்பது மனிதனது சிந்தனையே ஆகும். ஒரு மனிதனின் ஆழமான சிந்தனையே சமூகத்தில் பெரிய மாற்றங்களை கொண்டுவந்திருக்கிறது என்பதை நாமறிவோம். விதியின் வழி ஓடி கொண்டிருக்கின்ற நதியை அணைகட்டி திருப்புகிற சக்தி சிந்தனைக்கு உண்டு என்றால் அந்த சிந்தனையின் பெருமையை வார்த்தைகளால் சொல்ல இயலாது. ஐரோப்பிய நாடுகள் சிந்தனையின் சக்தியால் பொருட்களை உருவாக்கி குவித்தபோது நமது பாரத திருநாட்டு சிந்தனை என்பது மனித சமூகத்தை செப்பனிட்டு செம்மை ஆக்குவதில் முழுமையாக ஈடுபட்டிருந்தது. அதனால் தான் உலகத்தை ஆளுகின்ற சக்தி நமது தாய்நாட்டிற்கு இருப்பதாக நாம் நம்புகிறோம்.

இந்தியாவில் மதம் என்பதும், ஆன்மிகம் என்பதும் ஞானிகளின் சிந்தனை தொகுப்பிலேயே உருவானதாகும். அந்த சிந்தனையானது ஆழ்ந்து அகன்று சென்று அனுபவமாக வெளிபட்டதனால் பிரபஞ்சத்தின் தோற்றம், ஒழுக்கம் உயிர்களின் பிறப்பு மற்றும் இறப்பு போன்றவைகளை தற்கால விஞ்ஞானிகள் வியக்கும்படி அவர்களால் கொடுக்க முடிந்தது. இந்திய சிந்தனைகள் பெருவாரியாக இரண்டு விதத்திலேயே அமைந்திருப்பதை நாம் காணலாம். ஒன்று நமக்குள் நாம் என்ற உணர்ச்சிக்கு நிலைகலனாக எதோ ஒன்று இருக்கிறது அது எதோ ஒன்று மாற்றம் என்பதை அடையாமல் இருக்கிறது என்பதாகும். மற்றொன்று புறத்திலுள்ள அதாவது நமக்கு வெளியே உள்ள அனைத்தும் மாறிக்கொண்டே இருக்கிறது என்ற அனுபவமாகும். இந்த இரண்டுவித கருத்தில் எது சரி? எது தவறு? என்பதில் தான் இந்திய சிந்தனையின் போக்கு அமைகிறது.

உணர்வுகளுக்கு அடித்தளமாக உள்ளுக்குள் இருக்கும் ஆத்மாவின் மாற்றமில்லாத தன்மை மட்டுமே உண்மை என்று உபநிஷதங்களும் வேதாந்தமும் கூறுகிறது. அதாவது வைதீகமான சனாதன தர்மத்தின் ஆணி வேர் இந்த கொள்கை என்று கூறலாம். ஆனால் இதிலிருந்து முற்றிலும் மாறுபட்டு மாற்றம் என்பது தான் உண்மை. மாற்றம் இல்லாதது என்பதெல்லாம் பொய் என்று பௌத்தம் கூறுகிறது. இந்த இரண்டு வித சிந்தனைகளின் போக்கு தான் இந்தியாவிலுள்ள மதங்களின் அடிநாதமாக இருக்கிறது. இன்று கூட பெருவாரியான இந்தியர்கள் இதே சிந்தனை போக்கிலே இருப்பதை நாம் காணலாம்.

அதாவது மாற்றம் இல்லாததது உண்டு என்று கூறுகிற வேதாந்திகள் அப்படி மாறுதல் இல்லாததாக ஆத்மாவையும், பிரமத்தையும் குறிப்பிட்டார்கள். மாற்றம் ஒன்றே நடைமுறையில் உள்ளது என்று கூறுகிற பௌத்தவாதிகள் மாற்றம் என்பது இல்லை என்பதனால் பிரம்மம் என்பதும் இல்லை இருப்பது எல்லாம் வெறும் சூன்யமே என்றார்கள். சூன்யம், பிரம்மம் என்பது இருவேறு வார்த்தைகளாக இருந்தாலும் இரண்டையும் ஆழத் துருவிச் துருவி சென்றால் இரண்டின் முடிவும் ஒரே முனையில் இருப்பதை அறியலாம். அதாவது வேதாந்திகள் குளத்தில் பாதி அளவு தண்ணீர் இருக்கிறது என்றார்கள். பௌத்தர்கள் பாதி குடம் காலியாக இருக்கிறது என்கிறார்கள். இரண்டும் ஒன்று தான் வார்த்தைகள் தான் வேறு வேறு என்பதை சிந்தித்தால் நானும் புரிந்து கொள்ளலாம்.



ஆனால் சாங்கியமுனி என்று அழைக்கப்படுகிற கபில மகரிஷி பொதுவான கருத்தை உலகத்தார் முன் வைத்தார். அது அனைத்து தரப்பு மக்களுக்கும் அனுபவ ரீதியான உண்மையான கருத்தாகும். அதாவது அவர் சொன்னார் மாற்றம் இல்லாத பொருளும் இருக்கிறது அதன் பெயர் புருஷன். மாறுதல் அடைகிற பொருளும் இருக்கிறது அதன் பெயர் பிரகிருதி என்றார். இது சிந்தனை போக்கில் பெரும் புரட்சியை ஏற்படுத்திய திருப்புமுனையாகும். ஆனால் இந்த திருப்புமுனை புத்தர் காலத்திற்கு முன்பே ஏற்பட்டு விட்டது. அதாவது வேதங்களும், உபநிஷங்களும் மாற்றமே இல்லாத பொருள் உண்டு என்று கூறின போதே இல்லை மாறுதல் அடையும் பொருளும் இருக்கிறது என்று கபிலர் தெளிவுபடுத்தினார்.

கபிலர் மாறுதலடைவது மாறுதலடையாமல் நிலையாக இருப்பது என்று இரண்டு உண்மைகளை சொன்ன போதிலும் எது மாறுதல் அடைகிறதோ அது அறிவுடைய பொருளாகாது. எது மாற்றமில்லாமல் நிலையாக இருக்கிறதோ அது அறிவு மயமாக இருக்கிறது என்றும் அடிப்படை நியதி ஒன்றை உருவாக்கினார். கபிலரின் இந்த அடிப்படை நியதி மிகவும் முக்கியமானது. இந்த கருத்தை ஆழமாக மனதில் பதிய வைத்து கொண்டால் இனி கூறப்போகும் சாங்கியத்தின் சிந்தனை களத்தை தெளிவாக உங்களால் புரிந்து கொள்ள இயலும்.

உபநிஷத ஞானிகள் இந்த பிரபஞ்சம் ஒரே ஒரு மூலப் பொருளிலிருந்து தான் தோன்றியது. அந்த மூல பொருள் அறிவே மயமானது என்று கருதினார்கள். இவர்களின் கருத்துக்களை புகழ் பெற்ற பல உபநிஷதங்களில் நாம் காணலாம். ஆனால் இந்த கருத்துக்கள் கபிலரின் நியதிப்படி சற்றும் பொருந்திவராது. நிலையான அந்த பொருள் அறிவுமயமானது என்றால் அது தன்னிலிருந்து இந்த உலகத்தை தோற்றுவிக்கும் மாறுதலை அடைய முடியாது. அது மாற்றம் அடைந்தால் அறிவுப் பொருளாக இருக்காது என்று உபநிஷத கொள்கையோடு மாறுபட்ட கபிலர் மூலபொருள் இரண்டு பிரிவாக இருக்கிறது ஒன்று அறிவே வடிவான புருஷன். இன்னொன்று அழியக்கூடிய அசேதன வடிவான பிரகிருதி என்றார்.

பிரகருதி தான் உலகம் தோன்றுவதற்கான மூல பொருள். உலகம் அழியும் போது மாறுதலடையும் அசேதன பொருளாக பிரகருதியிலேயே சென்று ஒடுங்கி விடுகிறது. புருஷன் என்பது மாற்றம் அடையாத பொருள். பிரகருதி என்பது மாற்றம் அடைகிற பொருள். புருஷன் எதற்கும் காரணமும் அல்ல காரியமும் அல்ல. காரணம் என்பது பிறவற்றை உருவாக்குவது காரியம் என்பது மற்றதிலிருந்து உருவாவது. பிரகருதி காரிய பொருளில்லை. காரண பொருளாகும். அதாவது அது வேறு எதிலிருந்தும் தோன்றவில்லை என்றாலும் தன்னிடமிருந்து உலகம் தோன்றுவதற்கு காரணமாக இருக்கிறது. இப்படி புருஷன் பிரகருதி என்ற மூல தத்துவங்கள் இரண்டை வைத்து கொண்டு பிரபஞ்சம் முழுமைக்கும் விளக்கம் கூறுகிறார் கபிலர்.

இன்று உலகில் மிக உயரமான மலை என்று அழைக்கபடுகின்ற இமயமலை ஒருகாலத்தில் இல்லாமல் இருந்ததாம். அதாவது கடலுக்கடியில் மறைந்து கிடந்ததாம். பிறகு ஏற்பட்ட பூகோள மாற்றத்தில் பூமிக்கு மேலே வந்துவிட்டதாம். நாளை ஒருநாள் பூகம்பம் தோன்ற இயற்கை சீற்றம் ஏற்பட்டால் மிக உயரமான அந்த மலையும் கண்ணுக்கு தெரியாமல் மறைந்து போகுமாம். இது அந்த மலைக்கு மட்டும் பொருந்த கூடிய விஷயமல்ல. இந்த உலகில் நம் கண்ணுக்கு தெரிகின்ற எல்லா பொருளுமே ஒவ்வொரு காலத்திலும் அழிந்து கொண்டே தான் வருகிறது. இப்படியே ஒவ்வொன்றாக அழிந்து கொண்டே போனால் உலகம் என்பதும் ஒருநாள் அழிந்து தான் போகவேண்டும். அப்படி அழிந்து போனால் என்னவாகும்? உலகத்தின் முடிவு எப்படி இருக்கும் என்பதை அறிந்து கொள்ள மனிதர்களுக்கு


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com




ஆர்வம் இருப்பது இயற்கையானது.

இது வெறும் ஆர்வம் மட்டுமல்ல. அறிவைத் தீட்டி வைத்து ஆராய்ச்சி செய்ய வேண்டிய விஷயமும் கூட. இந்த உலகம் அழிந்த பிறகு இறுதியில் என்ன மிஞ்சி இருக்கும் என்பதை தெரிந்து கொண்டால் இந்த உலகம் எதிலிருந்து தோன்றியது என்பதை மிக சுலபமாக அறிந்து விடலாம். கபிலர் இந்த ஆய்வுக்கு ஒரு முடிவை தருகிறார் பிரகருதி என்பது தான் உலகத்தின் அழிவின் மிச்சமாக இருக்கும். அது நித்யமானது, வியாபகமானது என்றும் நிலைத்திருப்பது. ஜட உலகம் தோன்றுவதும் அதிலிருந்து தான் பின்பு சென்று முடிவதும் அதிலிருந்து தான். அது உருவமற்ற அருவம். அருவமான மூலப்பொருளை கபிலர் அறிந்து கொண்டது எப்படி? யார் கண்ணுக்கும் தெரியாததை இவர் மட்டும் தெரிந்து கொண்டது எப்படி? என்ற கேள்வி நமக்கு வரும்.

மற்ற ஞானிகளாக இருந்திருந்தால் இதை என் தவ பலத்தால் கண்டுபிடித்தேன். ஞானத்தால் உணர்ந்தேன் என்ற பதிலை தந்திருப்பார்கள். ஆனால், கபிலர் அவர்களை போல் பேசாமல் யதார்த்தமாக பேசுகிறார். மூலப்பொருள் பிரகருதி அந்த பிரகருதியானது கண்ணுக்கு தெரியாதது என்று சொன்ன கபிலர் அதை தான் யூகத்தினாலேயே கண்டுபிடித்ததாக ஒப்புகொள்கிறார். நுரையீரலில் நீர் சத்து அதிகரித்து விட்டால் ஜலதோஷம் பிடிக்கும் என்பது யூகம். ஜலதோஷம் முற்றிவிட்டால் ஜுரம் வரும் என்பது யூகம். ஜுரம் அதிகரித்தால் ஜன்னி வரும். ஜன்னி முற்றினால் மரணம் வரும் என்பதெல்லாம் யூகம் தான். இந்த யூகம் தன்னுடைய அனுபவத்தாலும் பிறருடைய அனுபவத்தாலும் வருகிறது. அதே நேரம் மிக ஆழமான சிந்தனையாலும் அறிவாலும் வருகிறது. கபிலர் அறிவால் அந்த யூக முடிவிற்கு வந்தார்.

இன்றைய அறிவியல் விஞ்ஞானிகள் ஆய்வுக் கூடங்களை பயன்படுத்தி மிகப்பெரிய நுணுக்கமான விஷயங்களையும் தெளிவாக விளங்க வைப்பது போல தெளிவாக கண்டுபிடிப்புகளை தருவது போல கபிலரும் தனது அறிவாற்றலால் பல ஆய்வுகள் செய்தார். அந்த ஆய்வின் சூத்திரங்களுக்கு யூகம் என்று பெயர் வைத்தார் என்று சொல்வது கூட சரியாக இருக்கும். கபிலர் பிரகிருதியில் இருந்து தான் அனைத்து பொருட்களும் தோன்றுவதாக கூறினார். அந்த கூற்றிலே அவருக்கே ஒரு சந்தேகம் வந்தது அவரே தனது கருத்துக்கு எதிரான ஒரு கேள்வியையும் எழுப்பினார். மண்ணை பிசைந்து பானை செய்கிறோம். அதே மண்ணால் தொட்டி செய்கிறோம். அழகான பொம்மைகள் செய்கிறோம். உருவத்தால் இவைகள் எல்லாம் மாறுபட்டதாக இருந்தாலும் தன்மையால் ஒன்றாக இருக்கிறது. அதாவது பானை, தொட்டி, பொம்மை இவை அனைத்தையும் உடைத்து ஒன்றாக பிசைந்து விட்டால் ஆதி மூலமான மண் மாற்றமின்றி கிடைத்துவிடுகிறது.

> **“ஆன்மிகம் என்பது ஆத்மாவின் இயல்பை பற்றி, ஆத்மாவின் உயர்வை பற்றி, ஆத்மாவின் எல்லையை பற்றி மிக அதிகமாக ஆராய்ச்சி செய் வதாகும். அந்த ஆய்வின் முடிவு கடவுளை நோக்கி சென்றாலும், கடவுள் தேவையில்லை என்று கடவுளை தவிர்த்து முக்தியை நோக்கி சென்றாலும் அதன் பெயர் ஆன்மிகம் தான்”**

அதே போல உலகம் எல்லாம் பிரகருதியால் உருவானது என்றால் அனைத்து பொருட்களின் இறுதி தன்மையும் ஒன்றாக இருக்க வேண்டும். பாம்பினுடைய உடலும், யானையினுடைய உடலும் ஒன்றல்ல. மீனின் சரீரமும் மனிதனின் சரீரமும் ஒன்றல்ல. மரத்தினுடைய சதையும் பசுவினுடைய சதையும் ஒன்றல்ல. ஒன்றுக்கொன்று மாறுபட்டது. முற்றிலும் முரண்பட்டது. ஒன்றான மூலப்பொருளிருந்து இவைகள் உற்பத்தி ஆனது என்றால் எல்லாமே ஒரு முடிவில் ஒன்றாக தானே இருக்க வேண்டும். மாறுபாடுகள் என்பது ஏன் வந்தன? எதற்காக இருக்கின்றன? என்ற கேள்வியை அவரே அவருக்குள் கேட்டுக்கொண்டார்.

ராஜஸம், சத்வசம், தாமசம் என்ற வார்த்தைகளை அடிக்கடி கேட்டிருப்போம் இவைகள் மனிதனின் குண இயல்புகள் என்பதை சுட்டிக்காட்டும் வார்த்தைகள் என்பதும் நம்மில் பலருக்கு தெரியும். கபிலரும் இதே வார்த்தைகளை பயன்படுத்துகிறார். ஆனால் இந்த பொருளில் அல்ல. அவர் இந்த மூன்று வார்த்தைக்கும் வேறு பொருளை தருகிறார். ராஜஸம், தாமசம், சத்வசம் என்ற வார்த்தைக்கு பகுதிகள் என்ற புதிய பொருளை





கபிலர் காண்கிறார். ஒன்றான பிரகருதியில் இந்த பெயர்களில் மூன்று பகுதிகள் இருப்பதாக நமக்கு சுட்டிக் காட்டுகிறார். இந்த பகுதிகளின் ஏற்றத் தாழ்வுகளால் கூடுதல் குறைவுகளால் பொருட்களில் மாறுபாடும் வித்தியாசமும் முரண்பட்ட தன்மையும் இருப்பதாக கபிலர் கூறுகிறார்.

இதை இங்கே எதற்காக சொல்கிறேன் என்றால் இந்த உலகத்தில் நாம் சந்திக்கின்ற நிகழ்வுகள் அனைத்திற்கும், பொருட்கள் அனைத்திற்கும் காரணங்கள் உண்டு. காரணங்கள் இல்லாத காரியங்களே இல்லை. பொருட்களின் உற்பத்திக்கு பிரகருதி தான் காரணம் என்றால் அதன் மாறுபாடுகளுக்கு காரியங்களாக அமைவது மூன்று பகுதிகள் என்று சொல்லி இந்திய சிந்தனை மரபில் முதன் முதலாக காரண காரிய வாதத்தை எடுத்து வைக்கிறார் கபிலர். எனக்கு தெரிந்து உலக சிந்தனை மரபில் எல்லாவிதமான காரியங்களுக்கும் காரணம் ஒன்று இருக்க வேண்டும் அதை தேடி செல்வதே அறிவின் வளர்ச்சிக்கான இலட்சணமென்று கபிலர் கூறுகிறார். இந்த காரண காரிய வாதத்திற்கு சத்காரிய வாதம் என்ற பெயரையும் அவர் தருகிறார்.

காரியங்களுக்குள் மறைந்து கிடைக்கிற காரணங்களை தேடி கண்டுபிடிக்கும் சுபாவம் நமக்கு வந்துவிட்டது என்றால், முழுமையான ஞான தேடுதலின் முதல்படியை நாம் அடைந்து விட்டோம் என்பது அர்த்தமாகும். என் உடலுக்கு காரணம் எதுவென்று நான் ஆராயத் துவங்கினால் என் உயிருக்கு காரணம் எதுவென்ற அடுத்த கேள்வி பிறக்கும்.

உயிரின் காரணத்தை தேடுகின்ற போது என்னை நான் தேடுகின்ற பயணம் துவங்க ஆரம்பிக்கும். என்னை நான் தேடி என் அடையாளம் இன்னதென்று உணர்ந்து தெளிவு பெறுவது தான் முக்தி நிலை. வீடு பேறு பரிபூரண விடுதலை எனவே கபிலர் கூறுகிற அறிவு வாதத்தின் நெடிய பாதையில் சிறிது தூரம் நடந்து சென்று நம்மை நாம் தேடுகின்ற முயற்சியில் வெற்றி கிடைக்கிறதா என்று முயற்சித்து பார்போம்.

**யோகி ஸ்ரீ ராமானந்த குரு**
மேலும் தொடர்பு கொள்ளவும்
**போன்: 9442426434**

# உலகம் உங்களுடையது



- ❖ தவறுகள் மனித இயல்பு, அதைப் பெரியதாக எண்ண வேண்டுவதில்லை. அதனை மீண்டும், மீண்டும் நினைப்பதால் துன்பமே ஏற்படுகிறது.
- ❖ ஒரு நாளில் 24 மணிநேரமும் பிரார்த்தனையில் செலவழிக்க முடியாது. பணி புரிவதில் நிறைய நேரத்தைச் செலவிட்டால், அதுவே மனம் தூய்மையடைய வழி வகுத்து விடுகிறது.
- ❖ இறைவனின் விருப்பத்தாலேயே அனைத்து விஷயங்களும் நடக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. மனிதன் செயலாற்றி தான் இறைவனின் விருப்பம் வெளியாகிறது.
- ❖ வாழும் உயிர்களில் ஏதாவது ஒன்றுக்காவது மன மகிழ்ச்சியை அளித்தால் உன் வாழ்க்கையின் லட்சியம் நிறைவேறிவிட்டது என்று பொருள்.
- ❖ இறைவனை நேசிப்பதில் துன்பம் என்ற பேச்சுக்கே இடமில்லை. இறைவனை மட்டும் நேசிப்பவன் புண்ணியவான்.
- ❖ நம்பிக்கையும், உறுதியுமே அடிப்படை, இவை இரண்டும் வாழ்க்கையில் இருந்தால் அனைத்தும் இருந்ததற்கு சமமாகும்.
- ❖ மனம் அமைதி பெற பிறர் குற்றங்களைக் காத்தீர்கள். உங்கள் குறைகளை எண்ணிப்பாருங்கள். உலகம் முழுவதும் அன்பில் சொந்தமாக்கிக் கொள்ளுங்கள். உலகில் எவரும் அந்நியரல்ல, உலகம் உங்களுடையது.
- ❖ ஜெபம், தவம் முதலான சாதனைகளில்லாமல் மனம் தூய்மை அடையாது. தூய மனத்தாலன்றி இறைவனை அறியவும் முடியாது.

பாகம் 9

# ‘‘ஆ(ம)ற பாரதம்’’

பிரும்ம தேவர் அக்னியிடம் “உலகின் சிருஷ்டி கர்த்தா நீயே. நீயே மூவுலகையும் தாங்குகிறாய். நீயே அனைத்தின் சுவாமியா கிறாய். நீ உடலால் சர்வ பக்ஷியாகமாட்டாய். உனது அபானத்தில் எழும் ஜுவாலைகளே அனைத்தையும் உண்டு விடும். மேலும் நீ சிதையின் நெருப்புமாவாய். இதுவே அனைத் தையும் உண்டு விடும். உன் ஜுவாலையால் எரிக்கப்படுபவை சுத்தமாகிவிடும். உன் தேஜஸால் தோன்றும் சிறந்த ஒளியாவாய். எனவே மகரிஷியின் சாபத்தை உன் தேஜஸால் சத்தியமாக்கிவிடு. உன்னில் ஆஹுதியாகும் தேவர்களின் உன்னுடைய பாகத்தை ஏற்றுக் கொள் என்று கூறினார்.

அதைக் கேட்ட அக்னி அதை ஏற்றுக் கொண்டு அங்கிருந்துச் சென்றார். தேவரும், ரிஷிகளும் மகிழ்ச்சியோடு பழையபடி தனது அக்னிஹோத்ர செயல்களை செய்து வந்தனர்.

முன்பொரு சமயம் ஸ்தூலகேசன் எனும் ரிஷி ஒருவர் இருந்தார். தவ வித்யைகளில் சிறந்தவராய் எல்லோர்க்கும் நன்மை புரிபவராய் இருந்தார். விஸ்வாவசு எனும் கந்தர்வராஜன் மேனகையிடம் மயங்கி ஒரு மகளை அடைந்தான். மேனகை அந்தப் பெண் குழந்தையை ஸ்தூல கேசன் ஆசிரமத்தருகில் பெற்று சிறிதும் இரக்கமில்லாமல் நதிக்கரையிலேயே போட்டுச் சென்று விட்டாள்.

ரிஷி அந்தக் குழந்தையை கண்டெடுத்து வளர்த்து வந்தார். அவளுக்கு ப்ரமத்வரா என்று பெயர்சூட்டி அழைத்து வந்தார். பருவமங்கையாய் நதிக்கரையோரம் விளையாடி வந்தவளை; ப்ரமதி க்ருதாசி அப்ஸரா தம்பதியினரின் மகன் ருரு கண்டார். அவளை மணக்க எண்ணி தன் தந்தையிடம் தெரிவிக்க அவரும் முனிவரிடம் சென்று மகளைக் கேட்டார். அவரும் வாக்களித்து விட்டார்.

விவாஹ முகூர்த்தம் நிச்சயிக்கப்பட்டிருந்த வேளையில் ஒரு சமயம் காட்டில் விளையாடிக் கொண்டிருந்தவள் அங்கிருந்த பாம்பினை தெரியாமல் மிதித்து விட பாம்பு உடனே அவளை தீண்டி விட்டது. பூமியில் அழகற்றவளாய் விழுந்து கிடந்தவளை தந்தையும், உத்தாலகர், ருரு, ப்ரமதி போன்ற பலரும் வந்து பார்த்து அழுது நின்றனர். ருரு அதை சகித்துக் கொள்ள முடியாமல் காட்டிற்குள் சென்று கதறி கதறி அழுதான்.

நான் தான, தர்மங்கள் செய்திருந்தால், குருமார்களைப் பூஜித்திருந்தால், பிறந்த காலம் முதல் புலனடக்கத்தோடு வாழ்ந்திருப்பது உண்மையானால் அந்தப். புண்ணியங்களின் பலனாய் என் அன்பிற்க்குரியவள் உயிர் பிழைக்கட்டும் என்று புலம்பியப்படி அழுதுக் கொண்டிருந்தவன் முன் ஒரு தேவதூதன் தோன்றினான். “மகாத்மாவே! நீ வருத்தம் கொள்ளாதே. இறந்தவர் மீண்டும் கிடைக்க வாய்ப்பில்லை என்பதை உணராதவனல்ல நீ. இவள் கந்தர்வ, அப்சராவின் மகள். தேவர்களின் நியதியை நீ செய்தால் உன் அன்பிற்க்குரியவளைப் பெறலாம் என்றான்.

உடனே ருரு “தேவனே! அந்த வழியை உடனடியாக கூறு. நான் அதை நிச்சயம் செய்வேன். எனக்கு இந்த உதவியை செய்” என்றதும் “உன் ஆயுளில் பாதியை நீ தந்தால் அவள் உயிர் பிழைப்பாள்” என்றான்



தேவதூதன். “நான் அப்படியே செய்கிறேன் அவள் முன்பு இருந்தது போலவே அழகோடு எழுந்து வரட்டும்'' என்று ருருவும் ஒப்புக் கொண்டான்.

கந்தர்வராஜன் விசுவாசுவும் தேவதூதனும் யமனிடம் சென்று விஷயத்தை எடுத்துச் சொல்லி சம்மதத்தை கேட்க தர்மராஜரும் அதற்கு ஒப்புக் கொண்டார். யமன் ஒப்புக் கொண்டதும் ப்ரமத்வரா தூங்கியவள் எழுவது போலவே எழுந்தாள்.

மிகுந்த பாக்யவனான ருரு நீண்ட ஆயுளை உடையவன். அதில் பாதியை தந்து அவளை உயிர் பெறச் செய்த பின் திருமணம் செய்துக்கொண்டான். ஆனாலும் பாம்பின் செயல் அவனுக்கு அமைதியை தராமல் இருந்தது. அதனால் பாம்புகளை அழிக்கத் தீர்மானித்தான். கண்ணில் பட்ட அனைத்து




பாம்புகளையும் அழித்து வரும் சமயத்தில் ஒரு நாள் காட்டில் டுண்டுப இனத்தின் கிழப் பாம்பு ஒன்று தூங்குவதை கண்டான். உடனே அடிப்பதற்கு தடியை ஓங்கினான்.

அதற்குள் அந்த பாம்பானது மனித மொழியில் “தவசீலனே! நீ ஏன் கோபத்தோடு என்னை கொல்ல நினைக்கிறாய். நான் எந்தக் குற்றமும் செய்யாத போது எதற்கு இந்த கோபம்? என்று கேட்டது.

சர்பமே! என் மனைவியை ஒரு பாம்பு தீண்டி விட்டது. அதனால் சர்பத்தைக்கண்டால் சொல்வதாக சபதம் எடுத்துக் கொண்டேன். இப்போது நீயும் உயிரை விட வேண்டியதுதான் என்றான் ருரு.

டுண்டுபன் “மனிதர்களை தீண்டும் பாம்புகள் வேறு. பாம்பு உருவத்திற்காக மட்டுமே நீ என்னைக் கொல்ல எண்ணாதே. நீ தர்மாத்மா என்னை இம்சிக்காதே” என்றான்.

ருரு “பாம்பே ! நீ யார்? ஏன் இந்த சரீரத்தில் இருக்கிறாய்?” என்று கேட்க டுண்டுபன் “நான் முற்பிறவியில் சஹஸ்ரபாதரெனும் ரிஷியாயிருந்தேன். ஒரு பிராம்மணனின் சாபத்தால் இந்த கதி அடைந்தேன்.

முன்பொரு காலம் ககமன் எனும் ஒரு பிராமணன் என் நண்பனாக இருந்தான். ஒரு நாள் அவன் அக்னிஹோத்ரம் செய்த போது நான் விளையாட்டாய் ஒரு துரும்பை சர்பமாக்கி

அவனை பயமுறுத்தினேன். பயத் தால் மூர்ச்சையுற்றான். பின் தெளிந்ததும் "என் னை பயமுறுத்த அற்ப சக்தியுள்ள பாம்பை அமைத் தாய். எனவே நீயும் அந்த பாம்பாவாய்" என்றான்.

"சாபத்தைத் திரும்பப் பெறும்படி பலமுறை வேண்டியும் செவி சாய்க்கவில்லை." பின்னா ளில் ப்ரமதியின் மகன் ருருவை தரிசனம் செய்திட சாபம் தீரும் என்றான். நீயே அந்த ருரு என்றுத் தோன்றுகிறது. இனி நான் என் பழைய உருவைப் பெறுவேன். எனக்கு நன்மைப் புரிந்ததால் நான் உனக்கு ஒன்று கூறுகிறேன்.

தன் சுயரூபத்தை அடைந்த டுண்டுபன் "அஹிம்சை எல்லாவற்றிலும் உத்தம தர்மமாகும். எனவே பிராமணன் எங்கும், ஒரு போதும், யாருக்கும் ஹிம்சை செய்யக் கூடாது என்பது வேத வாக்கியம். வேதங்களை அறிந்தவன் பிராணிகளுக்கு அபயமளிக்கிறான்.

தன்டனை, கோபம், மக்களைக் காத்தல் போன்றவை க்ஷத்ரியரின் வேலையேத் தவிர பிராமணனுக்குரிய வேலையல்ல.

இதுபோல் ஜனமேஜயனின் யாகத்தில் பாம்புகள் இம்சிக்கப்பட்ட போது வேத வேதாங்கங்களில் சிறந்த பிராமணனான ஆஸ்தீகன் மூலமே பாம்பு கள் காக்கப்பட்டது" என்று செல்லி முடித்தார்.

ருரு "ரிஷியே! ஜனமேஜயன் பாம்புகளை எதற்காக இம்சித்தார்? எதற்காக சர்ப யாகம் செய்தார்? யாகத்தில் எதற்காக பாம்புகளை இம்சித்தார் என்பதை கேட்க விரும்புகிறேன் என டுண்டுபனிடம் தெரிவித்தார்.

ஒரு பாம்பு ஒன்றினை முதலாகக் கொண்டே இத்தனைப் பெரிய காவியம் துவங்குகிறது, மஹாபாரதம் என்றதுமே பஞ்ச பாண்டவர், கௌரவர் கதை தானே அதுதான் எங்களுக்கேத் தெரியுமே என்று பேசும் பலருக்கு முன்னால் உள்ள பல பல வரலாறுகள் தெரியாமல் போகிறது. அது ஒன்றும் அத்தனை முக்கியமில்லை என்பது அவர்களது எண்ணமாயிருக்கலாம் ஆனால் சாரமே இதற்குள் தான் இருக்கிறது என்பதை முழுமையாக எடுத்து ஊன்றிப் படிக்கும் போது தான் தெரியும். சாதாரண கதைகளில் நேரம் போக்கியவர்கள் அல்ல நம் முன்னோர்கள் என்பதை பாண்டவர்களின் பிறப்பிற்கு முன்னால் உள்ள சரித்திரங்களை அறிந்துக் கொள்ளும் போது தான் தெரிய வரும்.

டுண்டுபன் சொன்ன காரணம் என்ன என்பதை அடுத்த தொடரில்.

- Thali,
Ph:9786223577



# அஷ்டமாசித்துக்களும், அதன் விளக்கமும்



### அணிமா

பெரிய ஒரு பொருளை தோற்றத்தில் சிறியதாகக் காட்டுவது/ஆக்குவது. ப்ரிங்கி முனிவர் முத்தேவர்களை மட்டும் வலம் வருவதற்காக சிறு வண்டாக உருமாறினார் என்ற செய்தி அணிமா என்ற சித்தைக் குறிக்கும்.

### மஹிமா:

சிறிய பொருளைப் பெரிய பொருளாக்குவது. வாமன அவதாரத்தில் திருமால் இரண்டடியால் மூவுலகை அளந்ததும், க்ருஷ்ணன் அர்ஜுனனுக்கு உயர்ந்த வடிவம் காட்டி உலகமே தன்னுள் அடக்கம் என்று காட்டியதும் மஹிமா என்னும் சித்தாகும்.

### லஹிமா:

கனமான பொருளை இலேசான பொருளாக ஆக்குவது. திருநாவுக்கரசரை சமயப் பகை காரணமாக கல்லில் கட்டி கடலில் போட்டபோது கல் மிதவையாகி கடலில் மிதந்தது லஹிமா ஆகும்.

### கரிமா:

இலேசான பொருளை மிகவும் கனமான பொருளாக ஆக்குவது. அமர்நீதி நாயனாரிடம் கோவணம் பெறுவதற்காக இறைவன் வந்தபோது, ஒரு கோவணத்தின் எடைக்கு தன்னிடமுள்ள எல்லா பொருட்களை வைத்தும் தராசுத் தட்டு சரியாகாமல் கடைசியாக தானும் தன் மனைவியும் ஏறி அமர்ந்து சரி செய்த சித்தி கரிமா.

### பிராத்தி:

எவ்விடத்திலும் தடையின்றி சஞ்சாரம் செய்வது. திருவிளையாடற்புராணத்தில் "எல்லாம்வல்ல சித்தரான படலம்" என்னும் பகுதியில் சிவன் ஒரே சமயத்தில் நான்கு திசைகளிலும் காட்சியளித்ததாக வரும் சித்தி பிராத்தி.

### பிரகாமியம்:

வேண்டிய உடலை எடுத்து நினைத் தவிடத்தில் அப்போதே தோன்றுதல். அவ்வையார் இளவயதிலேயே முதுமை வடிவத்தைப் பெற்றதும், காரைக்கால் அம்மையார் தன்னுடைய அழகான பெண்வடிவத்தை மாற்றி பேய் வடிவம் பெற்றதும் பிரகாமியம் என்னும் சித்தாகும்.

### ஈசத்துவம்:

ஐந்து தொழில்களை நடத்துதல். திரு ஞானசம்பந்தர் பூம்பாவைக்கு உயிர் கொடுத்து எழுப்பியமை ஈசத்துவம் எனும் சித்தாகும்.

### வசித்துவம்:

ஏழுவகைத் தோற்றமாகிய தேவ, மானிட, நரக, மிருக, பறப்பன, ஊர்வன, மரம் முதலியவற்றைத் தம்வசப் படுத்துதல். திருநாவுக்கரசர் தம்மைக் கொல்வதற்காக வந்த யானையை நிறுத்தியதும், ராமர் ஆலமரத்திலிருந்து ஒலி செய்து கொண் டிருந்த பறவைகளின் ஓசையை நிறுத் தியதும் வசித்துவம் எனும் சித்தாகும்.





# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின் அனைத்து பிரதிகளையும் பார்த்து படித்து மகிழ

www.aanmeegamalar.com

பாருங்கள் அனைவருக்கும் பகிருங்கள்




www.aanmeegamalar.com


www.aanmeegamalar.com

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்" பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com



# பொங்கல் பண்டிகையான தை நீராடல்

பொங்கல் என்பது தென்னிந்திய மக்களின் பழமை வாய்ந்த பண்டிகையாகும்; குறிப்பாக தமிழர்களின் பண்டிகையாகும். இந்த பண்டிகையின் வரலாற்றைப் பார்க்க வேண்டுமானால் நாம் சங்க காலமான கி.மு. 200 கி.மு. 300 நோக்கி செல்ல வேண்டும். பொங்கல் என்பது சமஸ்கிருத புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதை போல் திராவிட அறுவடை பண்டிகையாக அறியப்பட்டாலும் கூட, வரலாற்று அறிஞர்கள் இந்த பண்டிகையை சங்க காலத்தின் போது கொண்டாடப்பட்ட தை நீராடல் என நம்புகின்றனர்.

தை நீராடல்: சங்க காலத்தின் போது நடந்த கொண்டாட்டங்கள் தான் இன்றைய பொங்கல் கொண்டாட்டமாக மாறியுள்ளது. கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, தை நீராடலின் போது சங்க கால பெண்கள் 'பாவை நோன்பு' என்ற விரதத்தை கடைப்பிடித்து வந்தனர். பல்லவர்களின் ஆட்சி காலத்தில் (கி.பி. 400கி.பி.800) இது மிகவும் முக்கியமான பண்டிகையாக விளங்கியது. தமிழ் மாதமான மார்கழியின் போது இது கொண்டாடப்பட்டது. இந்த பண்டிகையின் போது நாட்டில் மழையும் வளமும் செழிக்க வேண்டி இளம் பெண்கள் வேண்டுவார்கள்.

இந்த மாதம் முழுவதும் பால் மற்றும் பால் பொருட்களை தவிர்ப்பார்கள். தங்கள் முடிக்கு எண்ணெயிட்டு கொள்ள மாட்டார்கள். மேலும் பேசும் போது கடுமையான சொல்லை பயன்படுத்த மாட்டார்கள்.

பெண்கள் அனைவரும் விடியற்காலையில் குளித்து விடுவார்கள். ஈர மண்ணில் செய்யப்பட்ட கட்யாயணி என்ற பெண் தெய்வத்தின் சிலையை அவர்கள் வணங்கி வந்தார்கள். தை மாதத்தின் முதல் நாள் தங்கள் நோன்பை முடித்துக் கொள்வார்கள். நெற்பயிர்கள் செழிப்பதற்காக அளவுக்கு அதிகமான மழையை கொண்டு வருவதற்காகவே இந்த நோன்பு. பழமை வாய்ந்த இந்த மரபுகளும், சடங்குகளும் தான் பொங்கல் கொண்டாட்டங்களுக்கு பிள்ளையார் சுழி போட்டது.

திருப்பாவை மற்றும் திருவெம்பாவை தை நீராடல் பண்டிகை பற்றியும், பாவை நோன் பின் போது கடைப்பிடிக்கப்படும் சடங்குகள் பற்றியும், ஆண்டாளின் திருப்பாவை மற்றும் மாணிக்க வாசகரின் திருவெம்பாவை ஆகியவற்றில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. குலோத்துங்க சோழ அரசன் கோவில்களுக்கு நிலத்தை பரிசாக அளிப்பார். அதிலும் குறிப்பாக பொங்கல் பண்டிகையின் போது என திருவள்ளூர் வீரராகவா கோவிலில் உள்ள கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சைவ, வைணவத்தில் பொங்கல் பற்றி இரண்டு வரலாற்று கதைகள் உள்ளது. ஒன்று சிவபெருமானுடன் தொடர்புடையது, மற்றொன்று இந்திர தேவனுடன் தொடர்புடையது.

சிவபெருமான் மற்றும் நந்தி புராணத்தின் படி, ஒரு முறை நந்தியிடம் பூமிக்கு செல்லுமாறும், அங்கே மனிதர்களிடம் தினமும் எண்ணெய் தேய்த்து குளித்து, மாதம் ஒரு முறை மட்டுமே உணவு உண்ணுமாறு கூற சொன்னார் சிவபெருமான்.

ஆனால் நந்தியோ, தவறுதலாக, தினமும் உண்ணவும் மாத மொருமுறை எண்ணெய் தேய்த்து குளிக்கவும் அனைவரிடமும் கூறி விட்டார். இதனால் கோபம் கொண்ட சிவபெருமான், மனிதர்களுடன் நிலையாக பூமியில் வாழுமாறு நந்திக்கு சாபமிட்டார். அதிகமான உணவை தயாரிக்க மனிதர்களுக்கு உதவியாக நிலத்தை உழ வேண்டும் என கூறினார்.

இதன் காரணமாகத்தான் பொங்கலுக்கு அடுத்த நாள் மனிதர்களுக்கு உதவும் நந்தி தேவருக்கு சமமான மாட்டினத்தை சிறப்பிக்கும் வகையில் மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகிறது.

மற்றுமொரு புராணக் கதையின் படி, கடவுள்களுக்கு எல்லாம் அரசனானதால் மிகவும் கர்வத்துடன் இருந்து வந்த இந்திர தேவனுக்கு பாடம் புகுத்த எண்ணினார் குழந்தை பருவத்தில் இருந்த கிருஷ்ணர். ஆடு மேய்ப்பவர்கள் அனைவரும் இனி இந்திர தேவனை வணங்க வேண்டாம் என கூறினார். இதனால் கோபம் கொண்ட இந்திர தேவன், புயல் மழையை உண்டாக்க மேகங்களை பூமிக்கு அனுப்பினார்.

மழையும் 3 நாட்களுக்கு தொடர்ந்தது. கிருஷ்ணரோ மனிதன் இனத்தை பாதுகாக்க கோவர்த்தன மலையை கையில் தூக்கி சுமந்து கொண்டார். பின் தன் தவறையும், கிருஷ்ணரின் தெய்வீக சக்தியையும் உணர்ந்தார் இந்திர பகவான். கிருஷ்ணரிடம் மன்னிப்பு கேட்டு மக்களின் வாழ்விற்கு தேவையான நெற்பயிர் போன்றவற்றை மீண்டும் புத்துயிர் பெற்று செழிப்படைய உதவினார் இந்திரன். இதனால் இந்த தினத்தில் அறுவடை காலமாக மாறியது. இதனால் விவசாயம் செய்பவர்கள் இந்த நாளை பொங்கல் பண்டிகையாக கொண்டாட ஆரம்பித்தனர்.

பொங்கல் தினத்தன்று நெற்கதிர்களை அறுப்பதற்கு முன்பு கடவுளுக்கு விசேஷ பூஜை நடத்தப்படும். தங்களின் ஏர் கலப்பை மற்றும் நெல் அறுக்கும் அரிவாள்கள், சந்தன குப்பி ஆகியவற்றை வைத்து சூரியனையும், பூமியையும் விவசாயிகள் வணங்கிடுவார்கள். கடவுள் முன் வணங்கப்பட்ட கருவிகளை கொண்டு தான் நெற்கதிர்களை அறுவடை செய்வார்கள். நான்கு நாள் பண்டிகை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பண்டிகை கொண்டாடப்படுகிறது. முதல் நாளான போகிப்பொங்கல், குடும்பத்திற்கானது. இரண்டாம் நாளான சூரியப் பொங்கல் சூரிய பகவானை வழிபடுவதற்கான நாளாகும். மூன்றாம் நாளான மாட்டுப் பொங்கல், மாடுகளை வழிபடுவதற்கான நாளாகும். இந்த நாளில் மாடுகளை குளிப்பாட்டி, கொம்புகளுக்கு அடர்த்தியான வர்ணம் பூசி அதன் கழுத்தை சுற்றி மாலையிடப்படும். கடவுளுக்கு படைத்த பின், அந்த பொங்கல் கால்நடை விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் உண்ணுவதற்கு வழங்கப்படும். நான்காம் நாளான பொங்கல் காணும் பொங்கல், குடும்ப உறுப்பினர்களும், குடும்பத்துக்கு உறுதுணையாக விளங்கும் விலங்குகளையும் மகிழ்ச்சியுடன் அரவணைத்து செல்வதற்குமான நாளாகும்.

– என்.ஸ்ரீபதி, சென்னை.

# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

www.aanmeegamalar.com

MAGZTER DIGITAL MAGAZINE STORE TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து
மொழிகளிலும்
செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.